"தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தீண்டாமை என்பது ஒரு துரதிஷ்டவசமாக இருக்கலாம்... ஆனால் இந்துக்களுக்கோ, தீண்டாமை என்பது வரபிரசாதமாகும்..."

-அண்ணல் அம்பேத்கர்-

இதழ் : 20 மார்ச் - 2014 விலை : ரூ. 20/-

# வடு - VADU

# வடு

சாதிய 'வடு' அகற்றிடத் துணிந்த நெடும் பயணம் இது...!



## சாத்வீகத்தின் ஊடாகவும் வன்முறை ஊடாகவும் தமிழ்த் தேசியத்தைக் கண்டடைய தவித்த... தவிக்கின்ற... தலைமைகள் சாதியத்தை கண்டும் காணவில்லையே! ஏன்

யுத்த நிர்வாகிகள்

உடைத்தெறியப்பட வேண்டிய உணர்வு நிலைக்கு உள்ளாக்கப்பட்ட சாதியம்


தலித் பெண்கள் மீதான ஒடுக்கு முறைகள்

மலையகமும் சாதியமும்

சீவல் தொழில் கூட்டுறவு வெற்றிகளும் சவால்களும்

வெளியீடு: இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி - பிரான்ஸ்

# வடு வின் பார்வையில்...



# ‘யுத்த நிர்வாகிகள்’

தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் சமூக செயற்பாடுகளின் பிரதான எல்லையும் “அபிலாசைகளும்” என்பது பேணப்பட்டுவரும் சமூக கலாசார பண்பாட்டு அம்சங்களில் மாற்றம் நிகழவேண்டும் என்பதே ஆகும். இவற்றையே நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தியும் வருகின்றோம். இதன் காரணமாக இனப்பிரச்சனையின் நிமித்தம் மேலோங்கி முதன்மைப்படுத்தப்பட்டு வரும் “தமிழ் பேசும் மக்களுக்கான “சுயநிர்ணயம், அரசியல் அதிகாரம் குறித்த கட்சிக்கோரிக்கைகளின் அவசியத்தையும், அதன் தேவைகளையும் நாம் நிராகரிப்பவர்கள் என்பது அர்த்தமாகாது. ஆனால் இனப்பிரச்சனையே முதன்மையானது எனும் கோரிக்கையுடன், அந்த இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக செயற்படும் மக்கள் பிரதிநிதிகள் எனப்படுவோரின் (தமிழ்-சிங்கள) செயல்பாடுகள் என்பது கவலைக்கிடமானதாகவே தொடருகின்றது. இவர்கள் இனங்களுக்கிடையிலேயான முரண்பாடுகளை களைவதில் அக்கறை கொண்ட வர்களாகவோ மக்களின் வாழ்வாதாரத்திற்கு உகந்த அத்தியாவசிய தேவைகளை கவனத்தில் கொண்டு செயல்படுபவர்களாகவோ இனம்காண முடியாதுள்ளது. இனவாத அரசியலை பேணுவதே தமது இருப்பிற்கு சாதகமானது என இருதரப்பாரும் உள்நோக்குடன் செயல்பட்டு வருகின்றனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

மேற்குறித்த நிலைமைகள் குறித்து நாம் கவலை கொள்ளும் தருணத்தில்...“மார்ச் மாத சீசன்“ ஆரம்பமாகிவிட்டது “யுத்த நிர்வாகிகளிடமே” மீண்டும் நியாயம் கேட்கும் குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிவிட்டது. ஆம், வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஐ.நா மனித உரிமைச் சபையின் 25வது மாநாடு களை கட்டத் தொடங்கிவிட்டது. அமெரிக்க உயர் அதிகாரிகளான சர்வதேச குற்றவியல் நீதிபதி ஸ்டீபன் ஜே றாப் (STEPHEN J RAPP) அவர்களும். தென்-மத்திய ஆசிய விவகார உதவிச் செயலாளர் நிசா டிசய் பிஸ்வால் (NISHA DESAI BISWAL) அவர்களும் அண்மையில் இலங்கை விஜயம் செய்து ராஜபக்ச அதிகாரத்திற்கு வேட்டுவைக்கும் பொறிமுறைகளோடு திரும்பியுள்ளதாகவும் கருதப்பட்டு வருகின்றது. இவர்களது பொறிமுறைகளுக்கு ஆதரவாக ஆங்கிலேய, கனடிய “யுத்த நிர்வாகிகளது” சாட்சியங்களின் கரங்களும் இணைந்து ஐ.நாட்டின் மனித உரிமைக்குரலை நிகரில்லா உயரத்திற்கு உயர்த்தப்போவதாக ஆவலுடன் எதிர்பார்க்கப்படு கின்றது. இம்முறை ராஜபக்சவிற்கு “சர்வதேச மனித உரிமைத் தீர்ப்பு” வழங்கப்படுவது உறுதி என்பதாக அரசியல் அவதானிகளும் முடிவுரை எழுதிவருகின்றனர். இவ்வாறான கருத்துகளும் அவதானமும் அரசியல் அவதானிகளால் நோக்கப்படுவதென்பது ஒரு விடயமே அல்ல! மாறாக இதுதான் நீதியானது இவ்வாறான அணுகுமுறைதான் நியாயம், அதுவே தமிழ் மக்களின் வாழ்வில் ஒழியேற்றும் வல்லமை கொண்டது எனக்கருதும் மனநிலை அப்பாவித்தனமானது. மாறாக இந்த பழிவாங்கும் உணர்வை எமது தேசத்தின் சுய இறைமைக்கும், ஆளுமைக்கும் மிக ஆபத்தானதாக நாம் கருதுகின்றோம். தமது நலன்களை உள்நோக்கமாக கருதியே இலங்கை விவகாரத்தில் மேற்குலகின் மனித உரிமை எனும் மாயக்-கருத்துநிலை பிரயோகிக்கப்பட்டு வருகின்றதேயன்றி அது தமிழ் மக்களின் நலன் சார்ந்ததல்ல என்பதே மெய்யானது.

ஆனால் தற்போதைய அரசின் செயல்பாடுகள் மீதான அதிருப்திகளும், குற்றச்சாட்டுக்களும் அதிகரித்து வருகின்றன. இடம்பெறும் சிறுபான்மை மக்கள் மீதான வன்முறைகள், ஊழல்கள் போன்றவற்றிற்கு எதிரான அரசின் நடவடிக்கைகள் மந்தகதியிலேயே இருக்கின்றது. முன்றாவது முறையும் தானே ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதற்கான வியூகங்கள் வகுக்கப்பட்டும் வருகின்றது. இவ்வாறான தொடர்ச்சியான அதிகார இருப்பென்பது மிலேச்சத்தனமான சர்வாதிகார ஆட்சியின் எல்லையை நோக்கி நகர்வதற்கே வாய்ப்பாக அமைந்துவிடும். இவ்வாறான வரலாற்று ஆதாரங்கள் எம்முன்னால் போதுமான வகையில் குவிந்து கிடக்கின்றது. எனவே தற்போதைய அரசு எந்தப் பொறிமுறையூடாக அதிகாரத்தை கைப்பற்றியதோ அதேவழிமுறையில் இவ்வதிகாரத்தை அகற்றுவதே இறையாண்மையின் மகத்துவம் அடங்கியுள்ளது. ஆனால் அரசிற்கு எதிராக குரலெழுப்பும் அனைத்து தரப்புமே அதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளாது யுத்த நிர்வாகிகளின் அபிலாசைகளுக்கான அரச மாற்றம் ஒன்று இலங்கையில் நிகழ்த்த கோருகின்றனர். அத்தகைய மாற்றம் ஒன்று சர்வதேசத் தலையீட்டுடன் நிகழுமாயின் அவை மக்களின் ஜனநாயக வழிமுறையை பலவீனப்படுத்தும் செயலாகவே அமைந்துவிடும். தனது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற வகையில் ஒரு அரசு தேவைப்படும் பட்சத்தில் ஜனநாயகம் என்பது இந்த சர்வதேச யுத்த நிர்வாகிகளுக்கு ஏற்ப வளைந்து

*தொடர்ச்சி- - 26ம் பக்*

# உடைத்தெறியப்பட வேண்டிய உணர்வு நிலைக்குள்ளாக்கப்பட்ட சாதியம்.

து.தசோனியா.

சாதியம் பற்றி பேசநினைக்கும் போதே இன்று பலரும் "இல்லாதபொருளைப்பற்றி பேசுவது வீண்பேச்சு" என்று கூறுகின்றனர். ஆனால் இன்றும் சாதியம் யாழ்ப்பாணசமூகத்தில் வேரூண்றியுள்ளது. அதனை ஏற்றுக்கொள்ளாது மூடிமறைப்பது ஒருஅரசியல். பஞ்சமர்களாக அடையாளப்படுத்தப்பட்ட அல்லது பட்டியல்படுத்தப்பட்ட சாதிகளான அம்பட்டர், நளவர், பள்ளர், பறையர், வண்ணார் என்ற பஞ்சசாதிகளும் கீழ்நிலைப்படுத்தப்பட்டவை என சமூகத்தின் கட்டமைப்பை உருவகித்த ஆளும்வர்க்கத்தினர் கருதுகின்றனர்.

சாதியம் பிறப்பினால் உருவாக்கப்படுகிறது. ஆனால் ஆரம்பகால அறிஞர்கள் சாதியம் தோன்றியதற்கு இந்துசமயத்தின் வர்ணாச்சிரம கோட்பாடே காரணம் எனக்கூறுகின்றனர். ஒவ்வொருவரின் தொழில் நிலைமைகளை வகுத்து படிமலர்ச்சித்தன்மையில் சாதிவளர்ந்துள்ளது. ஆனால் இன்றைய சமூகமாற்றச்செயற்பாடுகளில் சாதியத்தின் பலம் என்பது தொழில்களை வைத்துதான் கூறுவது என்ற கருத்து உடைந்து போகவேண்டும். ஆனால் இன்னும் ஏன் தொழில்களால் உருவான சாதியம் தொழில்கள் அடையாளப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட பிரிவினர்களிடம் இல்லாது போயும் தொடரவேண்டும். இருந்தும் தொழில் என்பது சாதியமாக்கப்படுவது தவறானவிடயம். எல்லாத்தொழில்களும் பொருளாதாரத் தேவைக்குரியவையே என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

சாதியம் இன்று உணர்வு நிலைசார்ந்த ஒன்றாகமாற்றப்பட்டுள்ளது. அச்சுவேலி கிராமப்பகுதி ஒன்றில் எல்லாமக்களும் ஒன்றுசேர பொதுவான இடம் எனத்தெரிவுசெய்து நளவருக்குரிய சனசமூக நிலையத்தில் "விவசாய அழிவுக்கூட்டம்" பற்றி அறிவிப்பு விடப்பட்டு அனைவரும் அழைக்கப் பட்டிருந்தனர். நளவர், பள்ளர், வெள்ளாளர் அக்கிராமத்தின் நான்கு பக்கங்களிலும் வாழ்கின்றனர். ஆனால் அக்கூட்டத்திற்கு அச்சனசமூகநிலையத்தின் மக்களைத்தவிர வேறு எவரும் வந்திருக்கவில்லை. காரணம் நளவரின் சனசமூக நிலையத்திற்கு வருவதற்கு சாதியம் தடைவிதித்திருந்தது.

இக்கூட்டத்திற்கு சென்றிருந்த பள்ளர் சமூகத்தைசேர்ந்த இருவரும் இக்கூட்டத்தை வெள்ளாளரின் சனசமூகநிலையத்தில் வைத்திருந்தால் எல்லோரும் வந்திருப்பார்கள் என்றுகருத்து தெரிவித்தனர். அதன் பின்னர் அடுத்த அடுத்தநாட்களில் நளவர் சமூகத்தைசேர்ந்த தலைவரின் வீட்டிற்கு அழிவு விபரப்படிவத்தை பூர்த்திசெய்து ஊரின் வெள்ளாள, பள்ளசமூகத்தினர் கொண்டுசென்றிருக்கின்றனர். இச்சம்பவத்தில் வெளிப்படையாக சாதியம்தான் காரணம் என அனைத்துதரப்பினரும் ஏற்றுக் கொண்டிருந்தனர். இது ஒருசம்பவமே. ஆனால் இவ்வாறான பல்வேறுசம்பவங்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் இடம்பெற்றவண்ணமே உள்ளன. சலுகைகள் கிடைக்கவேண்டும் ஆனால் மறைவாக பெறவேண்டும் என்ற எண்ணப்போக்கு மனிதர்களிடம் காணப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகம் பல்வேறு இடங்களில் தங்களின் சுயநிர்ணயத்தை இழந்துவாழ்கின்றனர். உயர்சாதியென பேசப்படுபவர்களுக்கு மரியாதை கொடுத்து சலாம்போடும் நிலைமையில் வாழ்கின்றனர். இந்த எண்ணம் மாற்றப்படவேண்டும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படவேண்டும். சகலரும் மனிதர்கள்தான். இறைவன் படைக்கும்போது உயர்ந்தசாதியினர், தாழ்ந்தசாதியினர் என்று பிரித்து மனித உறுப்புக்களை குறைத்தோ கூட்டியோ கொடுப்பதில்லை. பிறப்புமுதல் இறப்புவரை திருமணம், முதலிரவு, பிள்ளைவளர்ப்பு, கல்வி, மரணச்சடங்கு போன்ற யாவுமே யாவருக்கும்

# சீதனம்

அச்சுவேலி
-அகல்யா பிரான்சிஸ்கிளைம்-

பெண்ணடிமை முறையில் பல ஆண்டுகளாக நிலைநிறுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் பொருளாதார கலாச்சார முறைகளில் சீதன முறையும் ஒன்றாகும் பெண்களுக்கான திருமண நிறைவேற்றத்திற்கு இச் சீதனம் என்பது ஒரு கட்டாய நிபந்தனையாக அன்று தொட்டு இன்று வரை பல வளர்ச்சி மாற்றங்களின் ஊடாக இருந்து வருகிறது. சீதனமுறையால் எமது சக சமூகத்தில் பொருளாதார பாதிப்பு மட்டும் ஏற்படவில்லை மனிதன் படைத்த பணத்திற்கு மனிதனே விலை போவதுடன் அவனையே அளக்கும் அளவு கோலாக பணம் இங்கு மாற்றம் அடைகின்றது. இன்றைய பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பினை போல சீதன முறை அதிகரிப்பும் வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது.

சீதனம் கொடுக்க வசதியற்ற குடும்பச் சூழலில் முதிர்கன்னியர் என்ற நிலையில் பல ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் இன்று சமூகத்தில் இருந்து வருவதை அவதானிக்க முடிகின்றது இச் சீதன முறைமை என்பது நிலவுடைமையின் கீழ் ஆணாதிக்க வரம்புகளுக்கு உட்பட்டதாகும். இந்த நடைமுறை சாதியம் போன்று தமிழ்ச் சூழலில் மிகவும் இறுக்கமானதாக இருந்து வருகின்றது. ஒரு பெண் கல்வி கற்று அரசாங்கத் தொழில் பெற்று மாதாந்தம் நிரந்தர வருமானம் பெறுபவராக இருந்தும் கூட அப் பெண்ணுக்கு சீதனம் என்ற பெயரில் லட்சங்களும் தங்கமும் நிலமும் வழங்கியே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் நமது தமிழ்ச் சூழலில் நிலைத்து நீடித்து வருகின்றது. அவ்வாறு ஆண் வீட்டார் கேட்டும் சீதனத்தை கடன்பட்டுக் கொடுத்து தமது பெண்ணைக் கரைசேர்க்கும் பெற்றோர் அக்கடனுக்குத் தமது ஆண் மகனைப் பொறுப்பாக்குவதுடன் அதே மகனுக்குப் பெண் பார்க்கும் போது தாம் மகளுக்குக் கொடுத்த அளவையும் விடக் கூடுதலாகச் சீதனம் பெற்றுக் கொள்ளவும் முன் நிற்கின்றனர். எனவே சீதனம் கொடுப்பதும் வாங்குவதும் ஒரு சுழல் வட்டத்தில் தொடர்கிறது. இதனால் ஏற்படும் துன்ப துயரங்கள் பாதிப்புக்கள் யாவும் ஒட்டு மொத்த சமூகத் துயரமாகவும் அவமானமாகவும் தொடருவதையிட்டுப் பழமைபேண்வாதிகள் கவலைப்படுவதில்லை. அதனை நியாயப்படுத்தவே முன்நிற்கின்றனர்.

தமிழ்த் தேசியத்தை உயர்த்தி நிற்கும் பழைமைவாதிகள் சீதனம் விளைவிக்கும் சமூக அநீதியைக் கேள்விக்கு உள்ளாக்கிக் கொள்வதில்லை. அவர்கள் சீதனத்தை உயர் வர்க்க, உயர் சாதிய, சமூக அந்தஸ்தாகவே கொண்டுள்ளனர். அதன் பாதிப்பு ஒரு சமூகக் கேடாக வசதியற்ற ஏகப் பெரும்பான்மையான பெண்களை எப்படிப் பாதிக்கும் என்பது பற்றிச் சிந்திக்கப்படவே இல்லை. . அத்துடன் மதம், பண்பாடு, மரபு, வழமை, குடும்பக் கௌரவம் என்பனவும் சீதன முறைமையைச் செழுமைப்படுத்தி நிற்கின்றன. ஊடகங்கள் எதுவுமே இச் சமூகப் பிற்போக்குத்தனம் அல்லது பெண்கள் மீதான அநீதி பற்றிக் கேள்வி எழுப்பிக் கொள்வதில்லை. இன்றும் தமிழ் ஆங்கில ஊடகங்களில் திருமணப் பந்தம் தேடும் விளம்பரங்களில் சாதி பற்றித் தவறாது குறிப்பிடப் படுவதுடன் சீதனம் பேசித் தீர்க்கப்படும் அல்லது தகுந்த சீதனம் வழங்கப்படும் என்றே வாராந்தம் வந்து கொண்டிருக்கிறது. தமிழர்கள் மத்தியில் மண்ணடிமை, பெண்ணடிமை, சாதியடிமை போன்ற ஒடுக்குமுறைகளும் அடிமைத்தனங்களும் நீடிக்கும் நிலையில் எவ்வாறு இன விடுதலை என்பதைச் சாத்தியமாக்க முடியும்.

பெண் ஒடுக்குமுறையின் ஒரு அம்சமாகக் காணப்படுவது சீதனமாகும். இச் சீதன முறையை ஒழிப்பதற்குரிய சமூக விழிப்புணர்வை மாற்றுக் கருத்துப் பிரசாரத்தின் மூலம் முன்னெடுக்க வேண்டும். சீதனம் கொடுப்பதும் இல்லை. வாங்குவதும் இல்லை என்பது நடைமுறையாக்கம் பெறும் வகையில் பரந்து பட்ட இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும். எல்லாப் பெண்களும் சீதனம் கொடுத்து திருமணம் செய்ய மாட்டோம் என்ற முடிவுக்கு வரவேண்டும். அப்போது யாரை திருமணம் செய்து கொள்வார்கள்! சீதனம் என்னும் பிச்சை எடுக்கும் ஆணாதிக்கவாதிகள். உயர்வர்க்கக் குடும்பங்களில் சீதனம் ஒரு சமூக அந்தஸ்தாகவும் தனிச் சொத்துடமை பேணுதலாகவும் சொத்து விரிவாக்கமாகவும் முன்னெடுக்கப்படுகிறது. அதுவே சாதாரண உழைக்கும் மக்களுக்கு குறிப்பாகப் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் ஒருவகையான உடைக்க முடியாத விலங்காக இருந்து வருகின்றது. இதனை உடைக்க எல்லாப் பெண்களும் இணைந்து போராட வேண்டும்

---

பொதுவான நடைமுறையே. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடு அர்த்தமற்றதே. சமூகக்குழுக்கள் அவர்தம் இலக்குகளை அடைய ஒன்றுகூடி உழைக்கவேண்டும். ஆனால் சாதியரீதியில் ஒடுக்கி, தாழ்த்தி அவர்களின் உரிமைகளையும், ஆளுமைகளையும் நசுக்க நினைப்பது மனித உரிமை மீறல் செயல்களாகும். ''சாதிகள் இல்லையடிபாப்பா'' என்ற பாரதியின் சொல்வரிகள் பலம் வாய்ந்தவை. 'சாதி'எனும் காரணத்தினால் ஒடுக்கப்படும் நிலமை மிகவும் மோசமானவை. அவை நீக்கப்படுவதற்கு சாதிய தடைகள் உடைத்தெறியப்படவேண்டும். தாழ்த்தப்பட்டவரென அடையாளப்படுத்தி ஒடுக்கப்பட்டுள்ள மக்கள் கல்விரீதியிலும், சமூகபொருளாதார நிலையிலும் மேன்மையடையவேண்டும். அதற்காக பாடுபட சமூகத்தின் ஒத்துழைப்பு அதிகம் வேண்டப்படுகிறது.

# நான் அடிமையல்ல

—சாந்தி—

நான் அடிமையல்ல நானும் ஒரு ஜீவன்
அதிகாரம் உனக்கும் அடிமைப்பார்வை
எனக்கும் விதிக்கப்பட்டதல்ல
நானும் நீயும் சேர்ந்ததே இவ்வுலகம்
இச் சமூகம் உன்னை பார்ப்பது போல்
என்னையும் பார்க்கட்டும்.
என் தேகம் உணர்வுகளற்ற
ஜடப் பொருள் அல்ல - நீ
விரும்பியபடி என்னை பிடித்து கொள்ள.
என் இலட்சியங்களை திறந்து
உன் வார்த்தை படி நடப்பதற்கு
நான் ஒன்றும் அடிமையல்ல
நானும் உன்னைப்போலுள்ள ஒரு - ஜீவன்

இலக்கியம் என்பது நாகரீகத்தை புகட்ட வேண்டும். மக்களிடம் உரிய குணங்களை புகுத்துவதாக இருக்கவேண்டும். ஆனால் ஆண்களுக்கு பெண்களை அடிமைப்படுத்தவேண்டும் என்பதற்கே இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன. இதனால்தான் பெண்கள் சமூதாயம் தலையெடுக்கவே முடியாது போய்விட்டது.

- பெரியார் -

# இருண்டிய யாழ்ப்பாணத்தின் ஒரு பாகம் – சீவல் தொழில் கூட்டுறவு சங்கங்களின் வெற்றிகளும் சவால்களும்.

*அகல்யா – அகிலன் கதிர்காமர்.*

பரம்பரையாக சீவல் தொழில் செய்து வரும் ஒரு சமூகம் வரலாற்றில் சாதிரீதியான ஒடுக்கு முறைகளையும், யுத்தகாலத்தில் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்கொண்ட சமூகமாகும். இச்சமூகத்தின் தொலைநோக்கு பார்வையாக மேற்கொள்ளப்பட்ட கூட்டுறவுச் சங்க நிர்வாக பணிமுறைகளானது சமூக மேம்பாட்டுக்குரிய அம்சமாக கருதப்படுகின்றது. ஆனால் இச்சமூகத்தின் தற்போதைய பொருளாதார நிலைமைகளோ மிகவும் கேள்விக்குரிய ஒன்றாகவே உள்ளது.

1972ம் ஆண்டு தொடக்கம் 40 வருடத்திற்கு மேலாக இயங்கிக் கொண்டிருந்த பனை தென்னை வள அபிவிருத்திகூட்டுறவு சங்கங்கள் சுய பொருளாதாரத்திற்கான அடித்தளமாக இருந்தது.போர் முடிந்த 4வருடத்திற்கு பின்னர் மேற்காள்ளப்பட்டுவரும் திறந்த பொருளாதாரக் கொள்கையாலும் அன்னிய சந்தைகளுக்கான ஊக்குவிப்புகளாலும் சுய பொருளாதார சிந்தனை அழிந்து போகுமா? யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏ-9 பாதை திறந்ததை தொடர்ந்து தெற்கிலிருந்து வருகின்ற சாராயம் பியர் என்பவற்றின் சந்தைப்படுத்தல் மற்றும் பார்களின் அதிகரிப்பு போன்றவற்றினால் கள்ளு சாரயம் போன்ற உள்ளுர் உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. மற்றும் அண்மைக் காலங்களில் விவசாய அழிவுகளினால் வருமானங்கள் வீழ்ச்சியடைந்திருப்பதால் கள்ளுக்கான நுகர்வும் குறைந்துள்ளது. அத்துடன் இளம் தொழிலாளர்கள் இத் தொழிலை ஒரு சிலர் செய்த போதும் அவர்களும் குறிப்பிட்ட சில நாட்களுக்கு பின் கலாச்சாரம், சுய கௌரவம், சாதிரீதியிலான பார்வை போன்றவற்றினால் இன்று சீவல் தொழிலை கைவிடுகிறார்கள்.

இலங்கை வரலாற்றில் கல்வி சுகாதாரம் வறுமை ஒழித்தல் போன்ற சமூக முன்னேற்றங்களுக்கு தொழிற்சங்கங்களினதும் கூட்டுறவு சங்கங்களினதும் தாக்கம் முக்கியமானது. இன்று வடமாகாண விவசாயிகள் உட்பட பொதுமக்கள் கடன்களில் மூழ்கிய போதிலும் பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளினால் சீவல் தொழில் சமூகம் இந்த கடன் கலாச்சாரத்தில் அகப்படவில்லை. இந்த கண்ணோட்டத்தில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் சவால்களுக்கு ஓர் தீர்வு காண்பதென் ஊடாக நெருக்கடியின் மத்தியில் இயங்கும் இலங்கையின் சுய பொருளாதாரத்திற்கும் சில வழிமுறைகளை கண்டடையலாம்.

**கடந்த கால தனது கள்ளுத் தொழில் அனுபவத்தையும், பொருளாதார வளரச்சிக்கான கூட்டுறவுச் சங்க பயன்பாடுகள் குறித்தும் 67வயதுடைய திரு. தர்மபாலசிங்கம் என்பவர் இவ்வாறு கூறுகின்றார்.**

“நான் 18வயதில் எனது மச்சானிடமிருந்து சீவல் தொழிலை பழகினேன். 1991ம் ஆண்டு இடம்பெயர்ந்து வன்னியில் சிராஞ்குளத்தில் வசித்தேன். அங்கும் சீவல் தொழிலையே செய்தேன். பின்னர் 2002ம் ஆண்டு அச்சுவேலிக்கு திரும்ப வந்து சீவல் தொழிலை செய்தேன். நான் 60வது வயதில் ஓய்வூதியத்தினை பெற்றேன். ஓய்வூதியம் எடுத்துக் கொண்டும்

சீவுகின்றேன். தற்போது நான் பொச்சுக்கட்டி மரம் ஏறுகிறேன். ஒரு நாளைக்கு 10 தென்னை மரம் சீவுகின்றேன். காலை 4 மணிக்கு எழுந்து வீட்டு வேலைகளை முடித்து சீவலுக்கு சென்று 9.30க்குள் கள்ளு இறக்கிக் கொண்டந்திடுவேன். பாளை தட்டுற முறை என்றால் கொஞ்சம் நேரமாகும் ஒன்றவிட்ட ஒரு நாள் பாளை தட்ட வேண்டும். பின் 11.30க்கு முன்னர் தவறணைக்குள் கள்ளு கொண்டு போய் கொடுக்க வேண்டும். பின்னர் தோட்டத்தில் போய் வேலை செய்வேன். மாடு கொண்டு போய் கட்டுவேன். பின்னர் மாலை 4.30க்கு திரும்பவும் சென்று 10 தென்னையும் ஏறி சீவி 6.30க்கு முன்னர் தவறணைக்கு கள்ளு கொண்டு செல்வேன். ஒரு நாளைக்கு 15 போத்தல் கள்ளுக்குகிட்ட கொண்டு போய் கொடுப்பேன். எனக்கு வருத்தம் வருகில் கால்களில் அதிக காயங்கள் வரும் நெஞ்சு வருத்தங்கள் வரும். கத்தி ஆரம்பத்தில் நல்ல கூராகவும் பெரிதாகவும் இருந்தது இப்போது எப்படி தேய்ந்து இருக்குது என்று பாருங்கோ. இதனைப் போல தான் நாங்களும் தேய்ந்து போகிறோம். மரத்தில் ஏறும் போது சீவிலிகூடு, கத்தி, பாளைதட்டும் பொல்லு, கள்ளு ஊத்த போத்தல் என்பன கொண்டு செல்வேன். முந்தி நான் பொச்சு மட்டை கட்டாமல் சீவும் போது கால் சரியாக காச்சுப் போய் இருக்கும். தற்போது பொச்சு கட்டி சீவுவதால் பறவாயில்லை. தோட்டமும் செய்வதால் ஆரம்பத்தில் வருமானம் பறவாயில்லாமலிருந்தது. தற்போது வெங்காயம் எல்லாம் அழிவடைந்ததால் பெரிதாக வருமானம் இல்லை. நான் 18 வயதில் கள்ளு சீவேக்க மரவரி முறை இருந்தது. நாங்கள் 5 பேர் இணைந்து 100ரூபா கட்டி மரம் சீவுவதாக அனுமதி எடுப்போம். நான் ஆரம்பத்தில 90 போத்தல் கள்ளு ஒரு நாளைக்கு சீவி கொடுப்பேன். அப்போது கள்ளு 10சதம். பின்னர் 1972ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது நான் 552வது உறுப்பினராக வேலை செய்தேன். கூட்டுறவு சங்கங்கள் வந்ததால் எங்களுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. தொழில் விடுற காலத்தில் சமாசத்திலிருந்த எங்களுக்கு ஊதியத் தொகை வழங்கப்படும். மரவரி இருந்த காலத்தில் கள்ளு எல்லாம் சீவி முதலாளிக்கே கொடுக்க வேண்டும். ஆனால் கூட்டுறவு வந்தபின் எங்களுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றது. விபத்து நிதி கட்டாய சேமம் என்று சொல்லி எங்கட கள்ளிலிருந்து 1ருபா கழிப்பார்கள். சேமப் பணம் மூன்று மாதத்திற்கு ஒருக்கா தருவார்கள். தொழில் விடேக்க கட்டாய சேமப்பணம் தருவார்கள். விபத்து நிதி தற்போது ஓய்வூதியத்திட்டமாக மாற்றப்பட்டு 60 வயதிற்கு பிற்பாடு தருவார்கள். நான் ஓய்வூதிய பணமும் எடுத்துக் கொண்டு சீவி வருகின்றேன். சீவல் தொழிலை எனது குடும்பத்தில் அப்பு மாமாவும், நானும் செய்கின்றோம். வரும்காலத்தில் எனக்கு பிறகு ஒருவரும் செய்ய மாட்டார்கள். இளம் தலை முறையினர் படிக்கிறார்கள். படிக்காதவர்கள் கூலி வேலைக்கு போகிறார்கள். 1960ம் ஆண்டு இடம் பெற்ற சாதி எதிர்ப்பு போராட்டங்களுடன் நானும் இணைந்து செயற்பட்டேன். தேனீர் கடை எதிர்ப்பு போராட்டங்களுடன் எல்லாம் இணைந்து செயற்பட்டேன். எங்கட வாசிகசாலையில் ரஷ்யா கொமினிஸ்ட் சீனா கொமினிஸ்ட் என்று இரண்டு கொமினிஸ்ட்கள் இருந்தன. இதில் சீனா கொமினிஸ்டுடன் நானும் ஒரு உறுப்பினராக அங்கம் வகித்தேன்.



## சீவல் தொழில்

சீவல் தொழில் என்றால் பனை தென்னை மரங்களில் ஏறி கள்ளினை இறக்கின்ற தொழிலாகும். இத் தொழில் ஆண்களினால் மட்டும் செய்யப்படுகின்றது. இவர்கள் காலை 6 மணியிலிருந்து பின்னர் 10.30க்குள் கள்ளினை தவறணைக்குள் ஒப்படைக்க வேண்டும். இது போலவே மாலை 4 மணிக்கு மீண்டும் சீவச் சென்று 6.30க்குள் தவறணைக்கு கள்ளினை ஒப்படைக்கிறார்கள். இடைப்பட்ட நேரங்களில் சிலர் தோட்ட வேலை செய்கின்றார்கள். ஒருவர் ஒரு நாளைக்கு 5-15க்கிடைப்பட்ட மரங்கள் காலையும் மாலையும் சீவுகிறார். இவ்வாறு மரத்தில் ஏறி இறங்குவதால் தொழிலாளர்கள் பல சிரமங்களை எதிர் கொள்கிறார்கள். மழை காலங்களில் மரங்களில்



ஏறுவதென்பது இவர்களுக்கு பெரிய சவாலாகவுள்ளது. மற்றும் இத் தொழிலானது உடலை வருத்தி செய்கின்ற ஒரு கடினமான தொழிலாகவுள்ளதனால் பல்வேறு நோய்களுக்குள்ளாகிறார்கள். அத்துடன் இவர்கள் மரம் ஏறும் போது விழுந்தால் உயிருக்கும் ஆபத்துண்டு. மேலும் இத் தொழிலானது குறிப்பிட்ட சாதி சமூகத்தினர் மட்டும் செய்யும் தொழிலாக இன்று வரையுள்ளது.□□ இவ்வாறு தர்மபாலசிங்கம் அவர்கள் தனது அனுபவத்தை கூறினார்.

சீவல் தொழிலாளர்கள் ஆரம்ப காலங்களில் முதலாளிக்கு நன்மை பயக்கும் மரவரி முறையின் கீழ் சுரண்டப்பட்டு மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள். 1972ம் ஆண்டு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டறவு சங்கங்களின் தோற்றங்களின் பின்னர் இவர்களுடைய பொருளாதார நிலை வளர்ச்சியடைந்தது. அக் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 7230க்கு மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டிருந்த கூட்டுறவு சங்கம் இன்று 3924 உறுப்பினர்களாக குறைவடைந்ததுள்ளது. இளம் தொழிலாளர்கள் மும்முரமான வேலையினூடாக அதிக மாதாந்த வருமானத்தை பெறக்கூடியதாக இருந்த போதும் சீவல் தொழிலின் கடுமையான சூழ்நிலை காரணமாக நீண்ட காலம் தொழில் செய்ய முடியாதுள்ளது. மேலும் ஒரு தனிநபர் தன் வருமானத்தை முதலீட்டுவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதனாலும் சமூக அணிதிரட்டலுக்கான சந்தர்ப்பங்கள் இல்லாத காரணங்களாலும் தொடர்ந்து பொருளாதார சமூக சவால்களை எதிர் கொள்கிறார்கள்.

## கூட்டுறவு சங்கங்களின் வரலாறு

யாழ்ப்பாணத்தில் சாதிக்கெதிராக 60ம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தின் பின் ஆரம்பிக்கப்பட்ட பனைதென்னை வள அபிவருத்திக் கூட்டுறவு சங்கங்களின் பங்கு பரந்து பட்டதாக விளங்குகின்றது. 1972ம் ஆண்டில் நிதியமைச்சராகவிருந்த என்.எம். பெரேரா அவர்களினால் சுய பொருளாதார முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்மூலமாகவே இலங்கை கூட்டுறவு சட்டத்தின் கீழ் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இவை கூட்டுறவு திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளாரின் வழிகாட்டலின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையின் கீழ் இயங்குகின்றன. இச் சங்கங்கள் கிராமப்புறமக்களின் பல அடிப்படை தேவைகளினை நிறைவு செய்கின்றன. ஒவ்வொரு தவறணையின் கிளை முகாமையாளருக்கு கீழ் காலை 11-2 மணிவரையிலும், மாலை 5-8 மணிவரையும் திறக்கபட்டு நடாத்தப்படுகிறது. சீவல் தொழிலாளர்கள் கொண்டுவரும் கள்ளின் அளவு பெறுமதி தரம் மற்றும் கணக்குகள் எல்லாவற்றிற்கும் பொறுப்பாக கிளை முகாமையாளரே இருக்கின்றார். மேலும் சீவல் தொழிலார்களினை ஓர் ஒழுங்கு முறையின் கீழ் கூட்டிணைந்து செயற்பட இச் சங்கங்கள் உதவுகின்றன. யாழ் மாவட்டத்தில் 19 சங்கங்களும் கிளிநொச்சி மாவட்டதத்தில் 4 சங்கங்களும் முல்லைத் தீவு மாவட்டத்தில் 7 சங்கங்களும் வவுனியாவில் 3 சங்கங்களும் மன்னாரில் 5சங்கங்களும் திருகோண மலையில் 2 சங்கங்களும் மட்டக்களப்பில் சங்கங்களும் உருவாக்கப்பட்டு வடக்கு கிழக்கில் இயங்கி வருகின்றன. இவற்றில் யாழ் மாவட்டத்திலுள்ள வலிகாமத்தில் 13, வடமராட்சியில் 3, தென்மராட்சி யில் 3 ஆகும்.

## கூட்டுறவு சங்கங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தொடர்பு

ஜனநாயத்திற்கான ஓர் உதாரணமாக விளங்கும் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு

சங்கங்களின் முழு அதிகாரமும் தொழிலாளர்களால் நியமிக்கப்படும் தலைவர்களிடமே காணப்படுகின்றது. இங்கு நிர்வாகத்திலுள்ள கூட்டுறவு பணியாளர்கள் அனைவரும் இவர்களின் தீர்மானங்களின் அடிப்படையிலையே இயங்க முடிகிறது. அத்துடன் சீவல் தொழிலில் ஈடுபடுபவர் மட்டுமே இங்கு அங்கத்தவர்களாக இயங்கலாம். இவர்கள் இச் சங்கங்களின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கிளை அங்கத்தவர், கிளைக்குழு, கிளைத்தலைவர், கிளைச் செயலாளர் என தெரிவு செய்யப்பட்டு பின்னர் பொதுச்சபை நெறியாளர், குழு தலைவர், உபதலைவர், செயலாளர், பொதுமுகாமையாளர் பணியாளர் குழு என்னும் கட்டமைப்பின் ஒழுங்கு முறையின் கீழ் செயற்படுகிறார்கள். ஆரம்ப காலங்களில் தொழிலாளர்கள் வீட்டில் வைத்து இத் தொழிலை செய்ததால் பல சமூக கலாச்சார பிரச்சனைகளினை எதிர் கொண்டார்கள். ஆனால் கூட்டுறவு அமைப்பின் மூலம் தங்களுக்கென நிரந்தரமான பாதுகாப்பான தொழிலினை ஏற்படுத்தி கொண்டார்கள். இத்தொழிலை செய்கின்ற தொழிலாளர்கள் ஒரு மாதத்தில் 30000 - 80000 ரூபா அளவு ஊதியத்தினை பெறுகின்றனர். அதிகளவு ஊதியத்தினை பெறும் தொழிலாக காணப்பட்ட போதும் பெரும்பாலும் இளம் வயதினர் இத்தொழிலை செய்வதில்லை. 30 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் செய்கிறார்கள்.

தொழிலாளர்கள் தவறணையில் கள்ளினை கொடுத்த பின்னர் தவறணையில் ஒரு போத்தல் தென்னங்கள்ளு 75ரூபாவிற்கும் பனங்கள்ளு 50ரூபாவிற்கும் விற்கப்படுகின்றது. விற்பனை செய்யப்படாது மீதியுள்ள கள்ளினை வடிசாலைகளுக்கு அனுப்புகின்றார்கள். வடிசாலைகள் 10ரூபாவிற்கு கள்ளினை வாங்குகின்றது இதனால் தொழிலாளர்களுக்கும் கூட்டுறவிற்கும் நஷ்டம் ஏற்படுகின்றது. ஒரு போத்தல் சாராய உற்பத்திக்கு ஏறத்தாள 10-14 போத்தல் கள்ளு தேவைப்படுகின்றது. வடிசாலையிலிருந்து 660 ரூபாவுக்கு கடைகளுக்கு விற்கப்படும் ஒரு போத்தல் சாரயத்திற்கு 445ரூபா அரசாங்கத்திற்கு வரி செலுத்துகிறார்கள். மீதி 215 ரூபாவிலும் தான் தொழிலாளர் ஊதியம் மற்றும் கள் வாங்குதல், வடிசாலைகள் இயங்கும் செலவுகள் என பயன்படுத்துவதால் இலாபம் கிடைப்பது குறைவாகவுள்ளது. மேலும் சாராயத்தின் உற்பத்தியில் வரும் இலாபங்கள் மிகவும் குறைவாக இருப்பதனால் கள்ளுக்கான கேள்வி குறைந்துள்ளது.

**யாழ்மாவட்டத்திலுள்ள வடிசாலைகள் சாராயத்தை கடைகளுக்கு விற்கும் விலை, கடைகள் விற்கின்ற விலை போன்றவற்றின் அட்டவணை.**

| *வடிசாலைகள்* | *வடிசாலைள் விற்கும் விலை* | *கடைகள் விற்கும் விலை* |
|---|---|---|
| வலிகாம வடிசாலை | 650ரூபா | 700ரூபா |
| திக்கம் வடிசாலை | 660ரூபா | 710ரூபா |
| வரணிவடிசாலை | 610ரூபா | 670ரூபா |


தற்காலத்தில் இக் கூட்டுறவு சங்கங்கள் பல நெருக்கடியின் மத்தியில் சில முயற்சிகளை முன்னெடுக்கின்றன அவற்றுள் முக்கியமாக குடிசைகளாக இருந்த தவறணைகளை புதிய கட்டிடங்களாகவும், மின்சாரக் காற்று வசதியுடன் கதிரையில் அமர்ந்து குடிக்கக் கூடிய வசதிகளுடன் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. போர்க்கால சூழலில் பல பனைகள் அழிக்கப்பட்ட போதிலும் மீதியுள்ள பனைகளிலிருந்து விழுந்த பனம் விதைகள் மூலம் பனைமரங்கள் மீண்டும் முளைத்துள்ளன. மற்றும் 1996ம் ஆண்டு இடப் பெயர்வின் போது பண கொடுப்பனவுகளை கூட்டுறவு சங்கங்கள் தொழிலாளருக்கு வழங்கியுள்ளது. பல்வேறுபட்ட இடங்களில் தொழிலாளர்கள் வசித்த போதும் இத் தொழிலை செய்யக் கூடிய வசதிவாய்ப்புக்களை சங்கங்கள் ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

## கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடுகள்

- 183 ஆசிரியர்களுடன் 120 பாலர் பாடசாலைளை நடாத்தல்
- பாலர் பாடசாலைக்கு சீருடை சத்துணவு
- சிறந்த அங்கத்தவர்களினை கௌரவித்தல்
- பிள்ளைகள் புலமைபரீட்சை சித்தி எனின் 5000ரூபா
- பல்கலைக்கழகம் சித்தி 10000ரூபா
- வருடாந்தம் பிள்ளைகளுக்கு கொப்பிகள் வழங்கள்
- வேலை வாய்ப்புக்கள் வழங்கள்
- இழப்பீட்டு தொகை வழங்கல்
- சித்த மருத்துவ கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தல்
- கிராமிய வங்கிகள் மூலம் சேமிப்பு கடன் வழங்கள்
- ஓய்வூதியம் மகளீர் சுயதொழில் முயற்சித் திட்டங்கள்




## பெண்களின் பங்களிப்பு



சீவல் தொழிலை பெண்கள் செய்வதில்லை. ஆனால் சங்கங்களில் பனங்கட்டி உற்பத்தி, பனாட்டு உற்பத்தி மற்றும் போத்தலில் கள் அடைத்தல் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிதல் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். இருந்தும் பெண்களின் பங்களிப்பு மற்றும் தலைமைத்துவம் கூட்டுறவுகளில் போதாது.

சீவல் தொழிலாளர்களின் பெண்கள் கூறுவது,ஆரம்ப காலங்களில் அதிக வருவாயை பெற கூடியதாக இருந்த போதிலும் தற்போது ஓரளவு வருமானம் தான் பெறக்கூடியதாகவுள்ளது. மற்றும் மரத்தில் ஏறும் போது உடல் ஆபத்தக்கள் ஏற்படுவதால் தொழிலுக்கு கணவர்கள் செல்வது பயமாகவுள்ளது. மேலும் சில காலங்களில் கள்ளு குறைவடைவதனால் வருமானம் போதுமானதாக இருப்பதில்லை இதனால் பெண்களும் ஆண்களும் கூலி வேலைகளுக்கும் செல்கிறார்கள்.

இத் தொழில் புரிபவர்களின் பிள்ளைகள் படித்து நல்ல நிலைக்கு வந்த பின் பிள்ளைகளோ இவர்களின் மனைவிகளோ சீவல் தொழிலை கணவர்கள் மற்றும் தந்தைகள் செய்வதை விரும்பவில்லை. மேலும் கிராமப்புற பாடசாலைகளின் சில ஆசிரியர்கள் சீவல் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி மேல் அக்கறை கொள்வதில்லை. மேலும் இவர்கள் உயர் சாதி மாணவர்களினாலும் புறந்தள்ளப்படுகிறார்கள். இத் தொழில் மீதான சமூக ஊக்கிவிப்பற்ற நிலையும், பாடசாலைகளில் தொடரும் சாதியப் பாகுபாடுமானது தமிழ் சமூகத்தை சீரழிக்கும் ஒரு அம்சமாகும்.

## சவால்கள்

சாதிய அடிப்படையில் தவறணைகளின் பதிவுகளுக்கு அயலவர்களின் எதிர்ப்புக்களும் முறைப்பாடுகளும் கூட்டுறவு சங்கங்களுக்கு சிரமத்தை கொடுக்கின்றது. கள்ளினால் உடலிற்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறைந்ததாக இருந்த போதிலும் கூடிய அற்ககோல் வீதத்தை கொண்ட சாராயத்தை விநியோகிக்கும் பார்களிலும் பார்க்க தவறணைகளுக்கே இவ்வாறான எதிர்ப்பு நிலவுகின்றது.

இன்று திறந்த பொருளாதார சந்தையில் போட்டி போடுவதற்கு தமது பொருட்களினை நவீனப்படுத்த வேண்டிய நிலையிலுள்ளனர். மற்றும் தெற்கிலிருந்து வரும் சாரயத்துடன் போட்டி போடக் கூடிய வடிசாலைகளின் தொழில்நுட்ப முன்னேற்றம் அவசியம். அத்துடன் கள்ளை போத்தல்களில் அடைக்கும் நவீனத்துவம் தேவைப்படுகின்றது. மேலும் வெளிநாடுகளுக்கு சாராயம் மற்றும் கள்ளினை ஏற்றுமதி செய்து கூடிய வருமானத்தை பெறக்கூடிய வாய்ப்புக்கள் தேவை. இவை சீவல் தொழிலாளர்களதும் கூட்டுறவு சங்க உறுப்பினர்களதும் வேண்டுகோளாகவுள்ளது.

ஆரம்ப காலத்தில் உயர்சாதி முதலாளிகளின் நிலமானிய ஆதிக்கத்தின் கீழ் சீவல் தொழிலாளிகள் சுரண்டப்பட்டார்கள். சங்கங்களின் தோற்றத்தின் பின் கூட்டுறவின் ஒழுங்கின் அடிப்படையில் தொழிலாளர்கள் சுயாதினமாக செயற்படார்கள். தற்கால முதலாளித்துவ பொருளாதார மாற்றங்கள் குறிப்பாக திறந்த சந்தையின் தாக்கம் மற்றும் போரின் பின் மீண்டும் தலைதூக்கியுள்ள சாதியத்தினால் இவர்கள் ஒரு சமூக பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுகிறார்கள்.

## தொழிலாளர்களின் எதிர்காலத்தை நோக்கி

சீவல் தொழிலாளர்கள் சிலருடன் உரையாடிய போது, தம்முடன் இத் தொழில் முடிவடைந்து விடும் என்றும் தம் பிள்ளைகள் இத் தொழில் செய்வதை தாம் விரும்பவில்லை எனவும் கூறினார்கள். மேலும் அவர்கள் அனைவரும் கல்வி ரீதியில் முன்னேற்றம் அடையலாம் என்று நம்புகிறார்கள். ஆனால் ஒரு சில தொழிலாளர்களின் பிள்ளைகளினை தவிர ஏனைய பிள்ளைகள் கல்வியினை இடைநிறுத்தி விட்டு கூலி வேலை செய்கிறார்கள். இவ்வாறான சூழ்நிலையில் இவர்களின் எதிர்காலம் பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. தற்கால வடமாகாண சபை தேர்தலில் சீவல் தொழில் சமூகத்தினை சேர்ந்த ஓர் கூட்டுறவு தலைவர் வேட்பாளராக இருந்தார். ஆனால் அவரால் கூட சீவல் தொழிலாளிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் எதிர் கொள்ளும் சவால்களை எதிர்கொள்ள முடியவில்லை. இது தமிழ் அரசியல், மற்றும் தமிழ் ஊடகங்கள், அத்துடன் இன்று வரையுள்ள சாதிய நிலைப்பு என்பவற்றின் குறைபாடுகளை காட்டுகிறது. வரலாற்றை பார்க்கும் போது யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய உயர் சாதி ஆதிக்கத்துடன் வந்த அரசியல் இச் சமூகத்தின் சுரண்டலுக்கே கை கொடுத்தன. ஆனால் பல தசாப்தங்களுக்கு முன் இச் சமூகமும் இடதுசாரிகளும் மேற்கொண்ட போராட்டங்களால் பல சமூக முன்னேற்றங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் தோன்றின.

இந்த கண்ணோட்டத்தில் தற்கால புத்திஜீவிகள் தமிழ் மக்களுடன் வெளிப்படையாக கலந்துரையாடி இச் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பார்களா? மற்றும் வட மாகாணசபை இந்த சமூக முன்னேற்றத்திற்கும் அவர்கள் முகம் கொடுக்கும் சவால்களுக்கும் தீர்வினை கொண்டு வருமா?

1972ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கூட்டுறவு சங்கத்துடன் சீவல் தொழில் சமூகம் பல முன்னேற்றங்களை கண்டு வந்தது. ஆனால் இந்த தொழிலை தொடர முடியாமல் கூலி வேலைக்குள் தள்ளப்பட்டு முதலாளிகளினால் மேலும் சுரண்டப்படலாம். இது உடமை இழப்பிற்கும் சாதிரீதியான சமூக புறந்தள்ளலுக்கும் வழிவகுக்கும் அபாயமுண்டு. இந்த சவால்களுக்கு சீவல் தொழிலாளர்களும் கூட்டறவு சங்கங்களும்அவர்களின் வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் சமூகத்தை மாற்றும் ஒரு இயக்கத்திற்கு தலைமை தாங்க வேண்டியுள்ளது.

இக் கட்டுரை எழுதவதற்கு தகவல்களை தந்துதவிய அச்சவேலி பிரதேசத்தை சேர்ந்தசீவல் தொழிலாளர்களுக்கும் மற்றும் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க பணியாளருக்கும்,அத்துடன் யாழ்ப்பாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுசங்க சமாசபணியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்


# இன்னொரு தளத்தில் மனம் மாறவேண்டியிருக்கிறது.

- கற்சுறா –

கனடா முறிகண்டிப் பிள்ளையாரையும் மடுமாதாவையும் தவிர யாழ்ப்பாணத்தார் மிகுதி எல்லாப் பெயரிலும் அநேகமாகக் கோவில் திறந்து விட்டார்கள். ஹப்பி ரெக்ஸ், சீமாட்டி சில்க் என்றும் லலிதா நகைமாடம் அப்பிகா ஜீவலறி என்று கஸ்தூரியார் வீதி ஞாபகங்களைக் கொண்டுவந்து கிட்டத்தட்ட கால் நூற்றாண்டைத் தாண்டிவிட்டது. போனவருடம் வன்னிவீதி என்று கனடா ஒன்ராறியோவில் வீதிக்கும் பெயர் வைத்தாகிவிட்டது. கனடியப் பாராளுமன்றத்திற்கு முதல் பெண் உறுப்பினரையும் தெரிவு செய்து பாராளுமன்றத்திற்கு அனுப்பிய பெருமையுடன் கனடாவில் தமிழ்ச் சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் பெருமை என்பது ஈழத்தில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலங்களில் மிக உன்னதாமகக் கணிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் தற்போது நிலவரம் அப்படியல்ல. ஒரு தொழில் சார்ந்தோ உதவி சார்ந்தோ தனது சமூகத்தவரை நாடும் தமிழன் ஒரு அச்சத்தை எதிர்கொண்டே நாடுகிறான். ஒரு அயோக்கியத்தனத்தின் வெளிப்பாட்டை தனது இனத்துக்குள்ளேயே நிகழ்த்திவிடும் சாத்தியத்தை இவன் கொண்டிருக்கிறான்.

பொதுவாகப் புதிதாக வரும் அகதி ஒருவன் படும் கஸ்டங்கள் எல்லா நாடுகளிலும் பொதுவாக இரந்தாலும், மிக அதிகமான தமிழர்களின் எண்ணிக்கையைக் கொண்ட கனடாவில் அது மிக அதிகமாகவே இருக்கிறது. வக்கீலை நாடுவதிலிருந்து வழக்கு முடியும் வரையும் இடைத்தரகர்களால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டேயிருக்கிறான். சண்சீ கப்பலில் வந்த 492 அகதிகளை மிக தமிழுணர்ச்சி மேலிட உச்சி முகர்ந்த தமிழ் வக்கீல்களும் தமிழ்ப் பத்திரிகையாளுர்களும் தமிழ் அரசியல்வாதிகளும் தற்போது அவர்களைக் கணக்கிலே எடுப்பதில்லை. கனடிய அரசுக்கு இருக்கும் அக்கறையில் ஒருவீதமளவும் இவர்களுக்கில்லை. எப்படி யுத்தம் முடிந்தவுடன் விடுதலைப் புலிகளின் இளைய போராளிகள் தமிழ் அரசியல்வாதிகளாலும் மக்களாலும் கைவிடப்பட்டார்களோ அதே போல் சண்சீக்கப்பல் அகதிகளை வைத்து கனடாவில் லாபம் ஈட்டிய பத்திரிகைகளும் அரசியல்வாதிகளும் அவர்களைக்கைவிட்டுவிட்டார்கள். 300க்கும் அதிகமான தமிழ் வக்கீல்களையும் மருத்துவர்களையும் பல தமிழ் அரசியல்வாதிகளையும் கொண்ட கனடியத்தமிழ்ச் சமூகமாக மாறி இருந்தாலும் அடிப்படையில் வளர்ச்சிகுன்றிய சமூகமாகவே தொடர்ந்து இருக்கிறது. மனதளவில் நிறவெறியையும் மதவெறியையும் சாதிவெறியையும் அது இன்னும் கைவிடவில்லை. நல்லூர்க் கந்தனையும் தெல்லிப்பளை துர்க்கை அம்மனையும், நயினாதீவு நாகபூசணியையும் வைத்துக் கொண்டிருக்கும் சமூகம் யாழ்ப்பாணத்து வறுத்த மிளகாய்தூளை தனது நேம் பிராண்டாக வைத்திருக்கும் சமூகம் இலகுவில் மாறாது. யுத்தம் முடிந்த ஈழத்தில் ஒருமாற்றம் காலப் போக்கில் நிகழ்ந்தாலும் கனடாவில் மாற நீண்டகாலம் எடுக்கும்.

**இனியும் இப்படியே தொடரும்....**



# தலித் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள்

**-சிந்து-**

Pண்டையகால தாய்வழி சமூகம் சிதைந்து தந்தை வழி ஆணாதிக்க சமூகம் மேலோங்கிய போது நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு ஏற்றவாறு புதுவித ஒடுக்குமுறைகள் கட்டமைக்கப்பட்டன. இக்கட்டமைப்புக்கள் பெரும்பாலும் பெண்னை ஒடுக்குவதன் மூலம் ஒரு சாதியை சமூகத்தை இனக்குழுவை இனத்தை அடக்கியாள வழிவகுத்தது. இந்த வகையில் பெண்கள் மீதான ஒடுக்கு முறை என்பது ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரை எல்லா சமூகங்களிலும் காணப்படும் ஓர் பாரிய பிரச்சனையாக விளங்குகின்றது. பெண்ணானவள் ஒருபுறம் பெண் என்பதற்காக பிரத்தியேகமான ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்துவரும் அதே நேரம் “தலித் பெண்ணாக இருக்கும் பட்சத்தில் விசேடமாக பல ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்டு வருகிறாள். தலித் பெண்களை பொறுத்த வரையில் ஆணாதிக்கம் சாதியம் பொருளாதாரம் கலாச்சாரம் என சகல வழிகளிலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

தலித் பெண்கள் எதிர் கொள்ளும் ஒடுக்குமுறைகளை பின்வரும் அடிப்படையில் நோக்கலாம்.

1. உயர் பதவிகளில் ஒடுக்குமுறை
2. கல்வி ரீதியலான பல ஒடுக்கு முறைகள்
3. பொருளாதார ரீதியிலான ஒடுக்குமுறை
4. சமூகரீதியிலான ஒடுக்கு முறை

## உயர் பதவிகளில் ஒடுக்குமுறை

•யாழ்ப்பாண சமூகத்தில் உயர்பதவிகள் அனைத்தும் உயர் சாதி என்று கூறப்படுபவர்களிடமே காணப்படுகின்றது. ஓர் சில தலித் ஆண்களினை தவிர தலித் பெண்கள் பதவி வகிப்பது என்பது விரல் விட்டு எண்ணக் கூடியளவிலேயே காணப்படுகின்றன. அவ்வாறு வகிப்பவர்களும் தமது சாதியினை அறிந்து பதவிகளிலிருந்து ஒடுக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் வேறு இடங்களுக்கு நகர்ந்து செல்வதுடன் தமது உறவுகளிடமிருந்து இடை விலகி கொள்கிறார்கள்.
•பல்கலைக்கழகங்களிலும் உயர் பதவிகளிலும் சரி வேறு பல வேலைத்தளங்களிலும் உயர் பதவிகள் வழங்குகையில் சாதிரீதியிலான ஒடுக்குமுறைகளை சந்திக்கிறார்கள்.

1- அண்மையில் பிரபல்ய பாடசாலை ஒன்றில் அதிபர் பதவிக்கு பெண் ஒருவர் விண்ணப்பித்தார் அவர் அப் பதவிக்குரிய அனைத்து தகமைகளும் கொண்டிருந்தும் தலித் பெண் என்ற காரணத்தினால் வேறு காரணங்கள் கூறி இப்பதவியினை அவருக்கு வழங்கவில்லை.
2- வேலனை பல நோக்கு கூட்டுறவில் வேலை செய்யும் பெண் ஒருவருக்கு முகாமையாளராக வருவதற்குரிய அனைத்து தகமைகளும் இருந்த போதும் அவர் தலித் பெண் என்ற காரணத்தினால் பாலியல் ரீதியிலான பொய் குற்றம் சுமத்தப்பட்டு அப்பதவியினை அடைய முடியாது செய்துள்ளனர்

உயர் சாதியினர்
•தலித் பெண்கள் உடலியற் கூறுகளாலும் பல்வேறு கட்டுப்பாடுகளாலும் அச்சுறுத்தப்பட்டு பொது இடங்களில் பேசுவதற்கு முடியாமல் உயர் சாதி ஆண்களினால் பணி இடங்களிலும் தனது சாதி ஆண்களினால் வீடுகளிலும் பாலியல் பலாத்காரத்திற்கும் ஆளாகின்றனர் நான் அடிமைப்பட்டிருக்கின்றேன் என்ற நிலமையை உணராமலே இது தான் தலை விதி என்ற விதிக்கோட்பாட்டை ஏற்று அப்படியே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் பல தலித் பெண்கள்

## கல்வி ரீதியிலான ஒடுக்கு முறைகள்

• பெண்கள் கல்வி கற்க கூடாது என்ற ஆரம்பகால சமூக கட்டமைப்பின் ஒடுக்கு முறைகளில் இன்று பல மாற்றங்கள் நிகழ்ந்த போதும் இக் கட்டமைப்பின் ஒடுக்கு முறைகள் தலித் பெண்கள் மீது இன்றும் தொடர்ச்சியாக காணப்பட்டு வருகின்றது.
• கிராம பாடசாலைகளில் அதிகம் தலித் பெண்கள் வெளிப்படையாக கல்வி ரீதியிலான ஒடுக்கு முறைகளினை ஆசிரியர்களினாலேயே சந்திக்கிறார்கள்
பாடசாலை ஒன்றில் ஆசிரியர் சிறுமியுடன் மிகவும் நல்ல நிலையில் இருந்தார் அண்மையில் தலித் சிறுமி என்று அறிந்தவுடன் அச் சிறுமி மீதுள்ள கவனங்கள் குறைந்ததுடன் வகுப்பின் பிற் பகுதியில் அவரை இருத்தினர் ஆசிரியருக்கும் மாணவிக்குமிடையிலான இடை விலகள் அதிகரித்தமையினால் மாணவி அப் பாடசாலையினை விட்டு மாறிவிட்டாள்.
• யாழ் கிராமங்களிலுள்ள அனேகமான தலித் பெண்கள் தமது பாடசாலைக் கல்வியினை தரம் 10, 11 இடை நிறுத்திக் கொள்கிறார்கள். இவர்கள் கல்வி மீது எவ்வித ஆர்வமும் இன்றி வீட்டு வேலை, கூலி வேலை செய்கிறார்கள். பெற்றோர்களுக்கும் கல்வி அறிவு தொடர்பான விழிப்புணர்வில்லை இவர்களின் கல்வி நடவடிக்கைகள் மீது எவ்வித அக்கறையும் இன்றி அவர்களுக்கு சிறுவயதிலே திருமணம் செய்து வைக்க முயற்சிக்கிறார்கள் ஆரம்ப கால தலித் பெண்களின் நிலைமை இன்றும் சில இடங்களில் தொடருகின்றது. எவ்வளவோ முன்னேற்றங்கள் கல்வி ரீதியில் அடைந்த போதும் புத்தூரில் ஒரு கிராமத்திலுள்ள தலித் மாணவிகள் எல்லோரும் 9ம் 10 ம் தரத்துடன் கல்வியை இடை நிறுத்தி விட்டு கூலி வேலைக்கு செல்கிறார்கள்
• பல பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தலித் பெண் என்ற காரணத்தினால் பல பதவிகள் கௌரவிப்புக்கள் நிகழ்வதில்லை
• 2006ம் ஆண்டு யாழ் கிராமத்திலுள்ள பெண்கள் பாடசாலை ஒன்றில் முதல் முதலாக இரு தலித் பெண்கள் பல்கலைக்கழக வாய்ப்பினை பெற்ற போது அப் பாடசாலை அவர்களினை கௌரவிக்கவில்லை. பிற்பட்ட காலங்களில் அதே பாடசாலை ஆதிக்க சாதி மாணவர்கள் என்று கூறப்படுபவர்கள் பல்கலைக்கழக அனுமதியினை பெற்ற போது கௌரவிக்கப்பட்டனர்.
• பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் போது பல தலித் பெண்கள் தமது ஊர், உறவுகளினை சொல்வதற்கு தயங்குகின்றார்கள். ஏனெனில் தமது சாதிகளினை அறிந்து மற்றவர்கள் தம்மை புறக்கணித்து விடுவார்கள் என்பதாலும், தமக்குரிய பதவிகள் கிடைக்க பெறாது என்கின்ற காரணங்களினாலும், தமது அடையாளங்களை மறைத்து வருகின்றனர். இந் நிலமைகள் வெளிப்படையாக தெரிவதில்லை மறைமுகமாக நிகழ்கின்றன. இவ்வாறு நிலமைகள் இருக்கும் போது எவ்வாறு சாதி ரீதியிலான ஒடுக்கு முறைகள் இல்லை என சில புத்தி ஜீவிகளினால் கூற முடிகின்றதோ தெரியவில்லை. அவவாறான நிலைமைகளை எதிர்கொள்ளும் போது தான் அதன் பாதிப்புக்களினை இவர்களாலும் உணர முடியும்.

## பொருளாதார ரீதியிலான ஒடுக்கு முறை

• தலித் பெண்களின் பொருளாதார-அரசியல் பின்புலங்களுக்கான ஆதரவற்ற சூழ்நிலையே இப் பெண்கள் மீது இழைக்கப்படும் பல ஒடுக்கு முறைகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. தம்மீதான ஒடுக்கு முறைகளை அறிந்திருந்தபோதும் அவர்களினால் அதனை எதிர்க்க முடிவதில்லை. அவ்வாறு எதிர்த்து கதைத்தால் இவர்களின் வேலைகள் பறிபோய் விடும் என்ற அச்சத்தில் எதிர்த்து பேச

முடியாது பல தலித் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள்

• அன்று தொட்டு இன்று வரை தலித் மக்களின் குறிப்பாக தலித் பெண்களிடம் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பெரும்பாலும் இல்லை இவர்கள் பொருளாதார ரீதியிலான சுரண்டல்களுக்குள் ஆளாகிறார்கள் குறிப்பிட்ட சில வேலைகள் தலித் பெண்களுக்கே உரியதாக தினக் கூலிகளாக செய்து வருகிறார்கள் உதாரணமாக மாநகரசபை துப்பரவாக்குதல் மிதி வெடி அகற்றுதல் சில கூலி வேலைகள் என செய்து வருகிறார்கள் இதற்கு பொருளாதார பின்னணியும் ஒரு காரணியாகும் ஒரு வேளை சாப்பாட்டிற்கு கூட ஆதிக்க சாதியினரையே சார்ந்து இருப்பதனால் இவர்கள் மீது தொடுக்கப்படும் பாலியல் ரீதியிலான வன்முறைகள் உழைப்பிற்கேற்ற ஊதியம் இன்மை போன்ற நெருக்கடிகள் ஊடாக முதலாளிகள் என்னும் ஆணாதிக்க உயர் சாதி வகுப்பினரினால் சுரண்டப்படுகிறார்கள்.

புத்தூர் என்னுமிடத்திலுள்ள அதிகளாவான பெண்கள் கூலி வேலை செய்யும் தலித் பெண்களாக விளங்குகிறார்கள். இவர்களினை குறைந்த கூலிக்கு பல இடங்களிலுமிருந்து வாகனங்களில் ஏற்றி செல்கிறார்கள்.

யாழ்கிராமங்களிலுள்ள ஓர் பெண் உயர் சாதி ஆண் ஒருவரினால பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டு ஓர் குழந்தைக்கு தாயான நிலையில் பிள்ளைக்கு தந்தை யாரென்று கூறமுடியாது சமூக ஒதுக்குதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாள். இவளினைப் போல நாம் அறியாமலே அதிகமான தலித் பெண்கள் இவ் ஒடுக்கு முறைகளுக்குள் ஆளாகிறார்கள்.

• தலித் பெண்களின் ஏழ்மையான பொருளாதார பின்னணியும் தங்கள் மீது திணிக்கப்படும் ஒடுக்கு முறைகளுக்கும் எதிர்த்து குரல் கொடுக்க முடியாத சூழ்நிலைக்கு அவர்களை தள்ளுகின்றது.

## சமூக ரீதியிலான ஒடுக்குமுறை

•சமூக அடுக்கமைவில் பெண்கள் பால் இனம், சாதி, மதம், வர்க்கம் என பலவற்றின் ஊடாக ஒடுக்கப்படுகிறாள் இதிலும் தலித் பெண் என்றதனால் அதிகமான ஒடுக்கு முறைகளுக்குள் உள்வாங்கப்படுகிறாள்.

இன்று சில ஊடகங்கள் விபசாரிகள் யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கிறார்கள் பெண்கள் இத் தொழிலினையே செய்து வருகிறார்கள் என்று செய்திகளினை அப்பட்டமாக பரப்புகின்றது. இந் நிமைக்கு இவர்களினை கொண்டு செல்லும் ஆண்களினை சுட்டி காட்ட தவறுகின்றது. ஆனால் பெண்ணை மட்டும் விபச்சாரி என்று கூறுகிறது. ஆண்களினை எப்போதும் ஓர் □விபச்சாரனாக□ நோக்குவதில்லை. சில ஆண்களினால் தான் இந் நிலமைக்கு கட்டாயத்தின் பேரில் தள்ளப்படுகின்றாள் என்பதனை சுட்டி காட்ட தவறுகின்றது. இவ்வாறான செய்தியை பார்த்து விட்டு உயர்சாதி வர்க்கத்தினை சேர்ந்த சமூகத்தினர் என்று தம்மை அழைப்பவர்கள் கூறும்போது உயர் சாதி பெண்கள் இவ்வாறான தொழில்களினை செய்ய மாட்டார்கள் கீழ் சாதி பெண்கள் தான் இப்படியான தொழில் செய்வார்கள் என்று பொது இடங்களில் பகிரங்கமாகவே கூறுகிறார்கள். இவ்வாறு சமூகத்தினால தலித் பெண்கள் சமூக புறந்தள்ளல்களுக்குள் உள்ளாகி ஒடுக்கப்படுகின்றார்கள்.

• இன்று தமிழர் மத்தியிலுள்ள சமூக நோயாக சீதனம் என்பது விளங்குகின்றது. தலித் பெண்களுக்கு இப் பிரச்சனை இல்லை எனவும் சிலர் கூறுகின்றாரகள். வரதட்சனை என்னும் சமூக நோயின் பிறப்பிடம் ஆதிக்க சாதியினரிடமிருந்து வந்த போதும் இன்றைய தலித் மக்களிடையேயும் வெகுவாக பரவிக் கொண்டு இருக்கின்றது. இதனால் யாழ் சமூகத்தில் அதிகமான தலித் பெண்கள் திருமணம் செய்ய முடியாத நிலையில் எமது சமூக சீதன கலாச்சாரத்தினால் ஒடுக்கப்படுகின்றார்கள்.

• இன்று வரை ஆணாதிக்க சமுதாயத்தையும் ஆதிக்க சாதியினரின் கலாச்சாரத்தினையும் தக்க வைத்துக் கொண்டு இருக்கின்றது எமது யாழ் சமூகம். இவை தங்களுக்கென ஒரு கோட்பாட்டை உருவாக்கி அவற்றை சமயம் என்ற அமைப்பின் மூலம் மக்களுக்கு அவர்களை அறியாமலே பரப்பி வருகின்றது. இவ் ஆதிக்க சாதி வர்க்கத்தினர் தாம் திணிக்க விரும்பும் கருத்துக்களை பல்வேறு புராணக்கதைகளின் மூலமும் கடவுளின் மூலமும் மக்களிடையே புகுத்துகின்றது. இத்தகைய காரணிகளினை கொண்டு பெண்களை குறிப்பாக தலித் பெண்களினை அடிமைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களை தங்களுடைய சொத்தாக பயன்படுத்துவதற்கும் இதைக் கையாளுகின்றனர்.

நெல்லியடியில் உள்ள கோயில் ஒன்றில் இன்று வரை தலித் பெண்கள் நுழைவதற்கு அனுமதி வழங்கவில்லை. இவர்கள் தமது கடமைகளை நிறைவேற்ற கிராமத்துக் கோவிலை விட்டு வேறு

இடங்களுக்குள் செல்கிறார்கள் இவ்வாறு நிலமைகள் இருக்கையில் எவ்வாறு எமது சமுகத்தில் சாதியம் இல்லை என்று சில அறிவாளிகள் என்போர் கூறுகிறார்களோ தெரியவில்லை

சாதி ஒடுக்குமுறை தொடர்பான விடயங்களினை பொதுமேடைகளில் முன்வைக்கும் தலித் சமூக நலன்விரும்பிகள் வரவேற்கப்படுவதில்லை. இத்தகைய நலன்விரும்பிகளிலும் பலர் ஆணாதிக்க கலாசாரத்தில் இருந்து வெளிவராதவர்களாகவே உள்ளனர். தலித் பெண்களுக்கு ஏற்பட்ட ஒடுக்குமுறைகள் வன்முறைகள் என்பன ஒரு பொருட்டாகவே கருதப்படுவதும் பேசப்படுவதுமில்லை தலித் செயற்பாட்டாளர்களும் இவற்றை பெரிதாக கருதுவதில்லை. தலித் பெண்கள் மீதான ஒடுக்கு முறையானது உடல் ரீதியாக மட்டுமல்லாமல் கொச்சைப்படுத்தும் மொழிகளினாலும் தொலைக்காட்சிகளில் தலித் பெண்ணை காட்டும் போது அவர்களின் நடை உடை பழக்கவழக்கங்கள் போன்றவற்றினை விளக்கும் போது அவர்களின் பொருளாதார பின் தங்கிய நிலையைக் கூட கவர்ச்சிகரமாக தான் சித்தரிக்கின்றார்கள். மற்றும் இப் பெண்களை மோசமான நடத்தை உடையவர்களாகவும், சமுதாய குற்றங்களின் பிறப்பிடமே இவர்கள் தான் என்பதாகவம் காட்டி ஆதிக்கசாதி மனோபாவங்களினை பிரதிபலிக்கிறார்கள்.

இன்று எமது யாழ் சமுகத்தில் அதிகமான தலித் பெண்கள் கணவனினை இழந்த நிலையில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்வதோடு, சமுக ஒடுக்கு முறைகளுக்கும் உள்ளாகி வருகின்றனர். இந்நிலைமைகள் பரவலாக கவனத்தில் கொள்ளப்படவேண்டும். ஒடுக்கப்பட்ட சமுகப் பெண்களின் விடுதலையின்றி ஒடுக்குமுறைகளுக்கு எதிரான விடுதலை என்பது முழுமை பெறாது. எப்படி தலித் விடுதலையில்லாமல் புரட்சிகர சமுக மாற்றம் சாத்தியமில்லையோ அது போல தலித் பெண்களின் விடுதலை பெறாத தலித் விடுதலையும் சாத்தியமற்றது.

# கற்சிலைமடு பாடசாலையில் பேணப்படும் தீண்டாமை

கற்சிலைமடுவிலுள்ள பாடசாலை ஒன்றில் வாணிவிழா இறுதிநாளன்று தலித் மாணவர்களை கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்கள் தமது வீட்டிலிருந்து பலகாரங்கள் செய்து கொண்டு சென்றார்கள். கேட்டுக்கொண்ட ஆசிரியர்களே அத்தலித் மாணவர்கள் கொண்டு சென்ற உணவை உண்ண மறுத்துவிட்டனர். அப்பாடசாலையில் கல்வி பயிலும் ஆதிக்க சாதி மாணவர்கள் தலித் மாணவர்கள் கொண்டு சென்ற உணவை சாப்பிடவேண்டாம் என்று கேட்டுக்கொண்டதாலேயே ஆசிரியர்கள் அவ்வுணவை தீண்ட மறுத்துள்ளதாக தெரிய வருகின்றது. மிக மனம் புண்பட்ட தலித் மாணவர்கள் இப்படி நாம் தீண்டத்தகாதவர்களாயின் எம்மிடம் சாப்பாடு கொண்டு வரும்படி கேட்காமலே இருந்திருக்கலாமே என வேதனையுடன் பேசிக்கொண்டார்கள். இச்சம்பவம் 2013ம் ஆண்டு ஐப்பசி மாதம் கற்சிலைமடு பாடசாலையில் நிகழ்ந்த தீண்டாமை நிகழ்வாகும்.

உணவு விடுதிகளில் நாங்கள் சாப்பாடு வாங்கி சாப்பிடும் போது தீண்டாமை உறங்கு நிலையில் இருக்கின்றது. காரணம் அதில் பொருளாதாரம் முக்கியமான இடத்திலுள்ளது. ஆனால் சமூக கிராம மட்டங்களிலும், கல்விநிலையங்கள், வேலை வாய்ப்புகளில் சாதியத் தீண்டாமை மிக அவதானமாக பேணப்பட்டே வருகின்றது. நாங்கள் கல்வியில் மேல் நிலை அடைந்தாலும் சாதிய ஒடுக்கு முறையிலிருந்து எம்மால் மீள முடியாது இருக்கின்றதே என பாதிக்கப்பட்ட அத் தலித் மாணவர்கள் வேதனையுடன் தம் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்கள்.




–மல்லியப்புசந்தி திலகர்–

15-01-2014 –

இந்தியாவில் இருந்து இருநூறு வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட கூலித் தொழிலாளர்களைக் கொண்டெழுந்த சமூகம் இன்று இலங்கையில் 'மலையகத் தமிழர்' எனும் தேசியமாக தங்களை பண்பாட்டு ரீதியில் நிறுவிக்கொண்டுள்ளனர். இலங்கை அரசாங்கப் பதிவுகளில் இந்த மக்கள் இந்திய தமிழர்கள் என அடையாளப் படுத்தப்படும்போதும் கூட, (சிங்களவர் 1, - இலங்கைத் தமிழர்-2, - இலங்கை சோனகர் 3, -இந்தியத் தமிழர் 4, ஏனையோர் 5 ) இந்த மக்களை 'மலையக மக்கள்' என சுட்டும் மரபு இன்று வழக்கில் உள்ளது.

காலனிய காலத்தில் இந்தியாவில் இருந்து மலேசியா, மொரிஷீயஸ், பர்மா, கம்போடியா, கரீபியன் தீவுகள் தென்ஆபிரிக்க நாடுகள் இலங்கை என பல நாடுகளுக்கும் தொழிலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அந்தந்த நாடுகளில் காடுகளை அழித்து கோப்பி, தேயிலை, றப்பர், கரும்பு , கொக்கோ, தென்னை, கறுவா மற்றம் வாசைன திரவியங்களின் பயிர்ச் செய்கைகளுக்காக பெருந்தோட்டங்களில் கூலிகளாக வேலை செய்வதற்கும், பெரும் வீதிகள், ரயில்பாதை அமைப்பு, சுரங்கம் அகழ்தல் போன்ற பார வேலைகளுக்கும், நகர சுத்தி தொழில் போன்ற கூலி வேலைகளுக்கும் இந்தியாவில் இருந்து மக்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இன்றைய நாளில் மொரிஷியஸ், தென்னாபிரிக்கா, கரிபியன், மலேசியா, கம்போடியா போன்ற நாடுகளில் அந்தந்த நாடுகளின் பெயர்களைக் கொண்டே 'தமிழர்கள்' என அழைக்கப்படுகின்றனர். மொரிஷியஸ் தமிழர்கள், தென்னாபிரிக்கத் தமிழர்கள், கரிபியன் தமிழர்கள் போன்ற அடைமொழி கொண்டு அழைக்கப்படும் இவர்கள் ஆங்கிலம் பேசும் தமிழர்களாக மாறிப்போயுள்ளனர். உதாரணமாக மேற்கிந்திய கிரிக்கெட் அணியில் மகேந்திரன் நாகமுத்து எனும் வீரர் 'மகேந்திரா நாகமூட்டா' என்றும், வீராசாமி பெருமாள் எனும் பெயர்கொண்ட வீரர் 'வீரசாமி பெர்மாள்' என்றும் உச்சரிக்கப்படுகின்றனர். கம்போடிய தமிழர்கள், பர்மா தமிழர்கள் நிலையும் இதுதான். இவர்கள் வாழும் நாட்டின் அந்நாட்டு அல்லது ஆங்கில மொழிகளுக்குள் கரைந்து போனவர்களாக உள்ளனர். ஒரு சிலர் தமிழ் மொழி அறிந்தவர்களாக உள்ளனர்.

இவர்களிடையே மலேசிய தமிழர்களும், இலங்கை மலையகத் தமிழர்களும் இன்றுவரை தமிழையே தாய் மொழியாகக் கொண்டுள்ளதுடன் இந்தியாவுடன் பண்பாட்டு, கலாசார ரீதியாகவும் உறவு முறைகளின் அடிப்படையிலும் தொடர்பினைப் பேணி வருபவர்களாகவும் உள்ளனர். இதில் மலேசியாவில் வாழுவோர் 'மலேசிய தமிழர்கள்' என்றோ அல்லது 'மலேயா தமிழர்கள்' என்று குறிக்கப்பட்டாலும் அவர்கள் மீதான இந்திய அடையாளம் முழுமையாக நீக்கம்பெறவில்லை. அதேபோல இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்கள் மாத்திரம் 'இலங்கைத் தமிழர்கள்' என்று அழைக்கப்படாமல் 'இந்திய வம்சாவளி தமிழர்கள்' எனும் சொல்லாடலினால் இன்றும் அழைக்கப்படுபவர்களாக உள்ளனர். இதற்கு பிரதான காரணமாக அமைந்திருப்பது 'இலங்கைத் தமிழர்கள்' எனும் பகுதியினர் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டு வாழ்ந்து வருவதாகும். இந்தியாவில் இருந்து வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து கூலிகளாகப் போன தமிழர்களைப் போல அந்த நாட்டுத் தமிழர்களாக அடையாளப்படுத்தப்படாமல் இலங்கையில் 'இந்திய வம்சாவளி தமிழர்களாகவே' தொடர்ந்தும் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்களே பண்பாட்டு அடிப்படையிலும் தேசியம் நோக்கிய பயணத்திலும் தங்களை 'மலையகத் தமிழர்' என

அடையாளப்படுத்துகின்றனர்.

இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் 'இலங்கைத் தமிழர்களிடம்' இருந்து இந்த 'இந்திய தமிழர்களை' வேறுபடுத்தி அறிய காலத்திற்கு காலம் வெவ்வேறு பெயர்களில் இவர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். காலனிய காலத்தில் அழைத்து வரப்பட்ட பொழுது 'இந்திய கூலிகள்' என்றும், பின்னர் 'கூலித்தமிழர்கள்' (அல்லது தமிழ்க்கூலிகள் - Cooly Tamils) என்றும் வெள்ளையர்களின் சில பதிவுகள் இந்த மக்கள் கூட்டத்தைக் குறித்துள்ளன. பின்னர் 'இந்தியத் தொழிலாளர்கள்' (Indian Labourers) என அழைக்கப்பட்டுள்ளதை 'திருமதி.மீனாட்சியம்மாள் நடேசய்யரின்' பாடல்களில் இருந்து அறிய முடிகின்றது. அதுவே பின்னாளில் 'பெருந்தோட்ட தொழிலாளர்' (Plantation Workers) என்றும், 'இந்திய வம்சாவளி தமிழர்' (Indian Origin Tamils) என்றும் மாறிவந்து இன்றைய பதிவுகளில் 'இந்தியத் தமிழர்' (Indian Tamils) என்று அரச நிர்வாக மட்டத்திலும், பண்பாட்டு அடிப்படையில் 'மலைநாட்டுத் தமிழர்' அல்லது 'மலையகத் தமிழர்கள்' என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இன்று மலையகத் தமிழர் என்றவுடன் இலகுவாக இந்த மக்கள் 'அடையாளம்' காணப்படும் சூழ்நிலை தோன்றியுள்ளது. இந்த மக்கள் சார்ந்து படைக்கப்பட்ட இலக்கியங்கள் இந்த 'மலையகம்' 'மலைநாடு' போன்ற சொற்களை முன்னிறுத்தி வந்துள்ளன. அதேநேரம் அவர்களின் தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும் கூட தங்களை அடையாளப்படுத்த 'மலையக' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். 'மலையகத் தேசிய தொழிலாளர் சங்கம்' எனும் தொழிற்சங்கம் ஒன்றும், 'மலையக மக்கள் முன்னணி' என்ற அரசியல் கட்சி ஒன்றும் இந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கையில் சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களான சிங்கள மக்கள் இந்த மக்களைக் குறிப்பதற்கு 'இந்தியானு தெமள' (இந்திய தமிழர்கள்) எனும் சொல்லை நாகரிகமாகவும் 'வத்துக்கர தெமள' (தோட்டப்புற தமிழர்கள்) எனும் சொல்லைக் கொச்சையாகவும் பயன்படுத்துகின்றனர். முஸ்லிம் மக்களும் இந்த 'தோட்டத்துத் தமிழ் மக்கள்' என்ற சொல்லையே பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

அதேநேரம் வடக்கு, கிழக்குப் பகுதிகளைப் பூர்வீகமாகக் கொண்ட 'இலங்கைத் தமிழர்கள்' இந்த மலையக மக்களை குறித்துக்காட்ட (அல்லது தங்களில் இருந்து வெறுபடுத்திக்காட்டுவதற்கு என்று கூடச் சொல்லலாம்) காலத்திற்கு காலம் வெவ்வேறு சொல்லாடலை பயன்படுத்திவந்துள்ளனர். இதில் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட சொற்களாக 'தோட்டக்காட்டான்'. 'வடக்கத்தியான்' போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் பிரபலமான சொல்லாடலாக அமைந்தது 'தோட்டக்காட்டான்' என்பதுதான்.

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தாகி இவர்கள் நாடுகடத்தப்பட்டபோது இலங்கையை விட்டு வெளியேறாமல் இருந்த பகுதியினரை கைதுசெய்து சிறையிலடைத்து கட்டாயமாக அனுப்பிவைக்கப்பட்ட வரலாறும் உண்டு. அப்போதெல்லாம் இவர்களுக்கு 'கள்ளத்தோணி' என்ற பெயரும் வழங்கப்பட்டது. உண்மையில் இவ்வாறு நாடுகடத்தப்பட்ட மலையக மக்கள் தலைமுறையினர், இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவர்கள். மலைப்பகுதிகளில் வாழ்ந்து கடலையே கண்டிராதவர்கள். ஆனால் இவர்களை கள்ளத்தோணி என்றார்கள். இதனை கவிஞர். மாத்தளை மலரன்பன், வெளிமடைக்குமரன் போன்றோர் தங்களது கவிதைகளில் பதிவு செய்துள்ளனர். காலப் போக்கில் 'மலைநாட்டுத்தமிழர்கள்' என்ற சொல் பயன்பாட்டுக்கு வந்தது.

குறிப்பாக யாழ்ப்பாண வழக்கிலேயே இந்தச் சொற்கள் கையாளப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். 'கள்ளத்தோணிகள்' என்பதனூடாக இவர்கள் தங்களது நாட்டுக்குள் கள்ளத்தனமாக படகினில் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பதை குறிப்பதற்கும் அதேபோல இந்தியா தமக்கு (யாழ்ப்பாணத்திற்கு) வடக்கே அமைந்தபடியால் அங்கிருந்து வந்தவர்களை இழிவாகச் சொல்வதற்கு 'வடக்கத்தியான்' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்கால மலையக சமூகத்தினர் தங்களுக்கு (மலையகத்துக்கு) வடக்கே உள்ள மாகாணமாக யாழ்ப்பாணம் அமைந்துள்ளதால் அங்குள்ளவர்களை 'வடக்கத்தையவர்கள்' என குறிப்பதும் வடக்கு - கிழக்கு மக்கள் இன்று 'கள்ளத்தோணிகளில்' சென்று தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம் பெற்றிருப்பதும் முன்னையதின் தலைகீழ் நிலைமையைக் காட்டி நிற்கின்றது.

*[மலையக மக்களை அன்று குறைந்த சாதியினராகவும், எளியவர்களாகவும் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட 'கள்ளத்தோணி' – 'வடக்கத்தியான்' – 'தோட்டக்காட்டான்' போன்ற நாகரிமற்ற சொற்களால் இன்றைய இலங்கைத் தமிழர்களால் மலையக மக்கள் அழைக்கப்படாதவிடத்தும் கூட அதன் உள்ளர்த்தமாக அமைந்த 'குறைந்தசாதியினர்' என்ற புரிதலே தொடர்ந்திருப்பது*

*அவதானத்துக்குரியது. எடுத்துக்காட்டாக மிக அண்மைய காலத்தில் பொதுவெளியில் நன்கறியப்பட்ட ஆளுமைகளில் ஒருவரான யாழ்ப்பாண பெண்மணி தனது கணவர் மலையகத்தை சேர்ந்தவர் என்றும் தான் அவரை காதலித்து திருமணம் முடிக்கும்போது தங்களது பெற்றோர் அதற்கு சாதியக் காரணம் காட்டி கடும் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் கூறினார். அவரது கணவர் பற்றி விசாரித்த பொழுது அவர் மலையகப் பகுதிகளில் அல்லது இந்திய வழக்கில் உயர்சாதிய குழுமுமாகச் சொல்லப்படும் 'மொட்டை வெள்ளாள' சாதியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்தது. ஆனாலும் அந்த பெண்மணி தான் குறைந்த சாதியான ஒருவரை தனது குடும்ப எதிர்ப்பையும் மீறி திருமணம் செய்த நினைப்பிலேயே உள்ளமை சுவாரஷ்யமானது. எனவே மலையகத்திலும் இந்தியாவிலும் உயர்வானவர்களாகக் கருதும் சாதியினர் கூட மலையகத்தவராக வரும்போது யாழ்ப்பாணத்தில் குறைந்த சாதியினராக பார்க்கப்படும் நிலைமையே இன்றும் உள்ளது.]*

இதேபோன்று பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் கூட யாழ்ப்பாண தமிழர்கள் சாதியில் உயர்ந்தவர்களாகவும் 'தோட்டப்பகுதி தமிழர்கள்' என்போர் சாதியில் குறைந்தவர்கள் என்னும் ஒரு புரிதல் உள்ளது. இது சிங்கள சாதிய கட்டமைப்பில் தலைகீழ் வடிவமாகும். அதாவது சிங்களக் கலாசாரத்தில் மலைநாட்டுப்பகுதியில் வாழ்வோர் (கந்த உடரட்ட) உயர் சாதியினராகவும் தாழ்நிலப்பகுதியில் வாழ்வோர் (பஹத்த ரட்ட) குறைந்த சாதியராகவும் பார்க்கும் நிலைமையே பொதுவில் உள்ளது. (உட்சாதி – கிளைச்சாதி வகைகளில் இதில் வெறுபாடுகள் உண்டு). இத்தகைய பின்னணிகளின் ஊடாகவே மலையகத்தமிழர்களின் சாதிய தோற்றப்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்து அணுக வேண்டியுள்ளது.

இந்தியாவில் இருந்து ஆங்கிலேயர்கள் தொழிலாளர்களை அழைத்துவரும்போது பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட சாதியினரே அழைத்து வரப்பட்டுள்ளனர். இந்திய சூழலில் நிலவிய கொத்தடிமை முறை, வறுமை அந்த ஒடுக்கப்பட்ட சாதியினருக்கான 'மாற்றுத்தெரிவாக' ஆங்கிலேயருடன் அந்நிய நாட்டுக்கு செல்லும் நிலைமையை உருவாக்கியுள்ளது. இந்தச் சூழலை விளக்கும் இலக்கியப்படைப்புகளில் 'பறைச்சேரி' எனும் சொல்லாடல் மூலம் இது உறுதிப்படுத்தப்படுகின்றது. புதுமைப்பித்தனின் துன்பக்கேணியில் 'பறைத் தெருவில் கங்காணி உபதேசம் செய்துகொண்டிருந்தான்' எனச் சொல்வதன் மூலம் கங்காணிகள் சாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்களைத்தான் அணுகியிருக்கிறார்கள் என்பதும், அந்த மக்களுக்கும் இந்த அடிமை வாழ்வுக்கு மாற்றுத்தெரிவாக அமைந்ததாகவுமே இந்த புலப்பெயர்வு அமைந்துள்ளது.

அண்மையில் வெளியான பாலாவின் 'பரதேசி' திரைப்படத்தில் இந்த நிலைமை திரிபுபடுத்தப்பட்டுள்ளமையானது விமர்சனத்துக்கு உள்ளானது. கிராமங்களில் கூத்தும் கும்மாளமும் நிறைந்து சந்தோஷமாக வாழ்ந்த மக்களை கங்காணி அழைத்துச் செல்வதாகக பரதேசியில் காட்டப்படுகிறது. அழைத்துச் செல்லப்படுபவன் குறைந்த சாதியைச் சேர்ந்தவன் என்பதைக் காட்டுவதற்கான குறியீடாக 'டீக்கடையில்" கதைநாயகன் 'பெஞ்சில்' உட்காருவதற்கு தடைவிதிக்கப்படுவதாக காட்டியது தவிர வேறு எங்கும் சாதிய ஒடுக்குமறை பரதேசியில அழுத்தமாகக் காட்டப்படவில்லை. ஆனால் பரதேசியின் மூல வேரான எச்.பி. டேனியலின் 'எரியும் பனிக்காடு' (மொழிபெயர்ப்பு –முருகவேள்) நாவல் இந்த சாதிய ஒடுக்குமுறையை விரிவாக சித்திரிக்கின்றமையை அவதானிக்கலாம்.

'இலங்கையில் கோப்பி, தேயிலையை பயிர்ச்செய்ய எத்தனித்த ஆங்கிலேயர்கள் சீனாவில் இருந்தும் ஆபிரிக்காவில் இருந்தும் தொழிலாளர்களைக் கொண்டுவருவதற்கு முயற்சித்துள்ளனர். இது செலவிற்குரியதாகவும் பொருத்தமற்றதாகவும் இருந்தமையினால் வறுமைக்குட்பட்ட பஞ்சம் கூர்மையடைந்த தென்னிந்தியாவில் இருந்து தொழிலாளர்களைக் கொண்டு வர முயற்சித்துள்ளனர். நிலமற்ற விவசாயிகள் தமது நிலைத்தலுக்காக நிலச்சுவாந்தரின் தயவின்பால் தங்கியிருக்க நேர்ந்தது. இதனால் சுபீட்சத்தை எதிர்பார்த்த இப்பிரிவினர் தமது உடலையும் உயிரையும் பாதுகாத்துக்கொள்ள எந்தவொரு துன்பத்தையும் தாங்கிக்கொள்ளத் தயாராகவிருந்தனர். இவ்வாறு வறுமைக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டிருந்த பிரிவினரே இலங்கையில் கோப்பித் தோட்டங்களில் வேலை செய்ய முன்வந்தனர்' (எழுதப்படாத வரலாறு – பெ.முத்துலிங்கம் பக் 6-7 – 1996).

முதலாவது ஆட்சேர்ப்பாக தின்னவேலி (திருநெல்வேலி), மதுரா (மதுரை), டெஞ்சூர் (தஞ்சாவூர்), இராமநாதபுரம், புதுக்கோட்டை பகுதிகளில் இருந்து அழைத்துவரப்பட்டுள்ளனர். அவர்களில்

பெரும்பாலானோர் தாழ்த்தப்பட்ட பிரிவினராவர். இவர்களுடன் மலையாள மக்களில் ஒரு பகுதியினரும் அழைத்துவரப்பட்டுள்ளனர். இவர்கள் அவ்வப்போது தொழில் செய்து (கோப்பிக்காலத்தில்) விட்டு பின்பு தமது சொந்த ஊர்களுக்கு திரும்பிச் சென்றுவிடும் பழக்கத்தைக் கொண்டிருந்துள்ளனர். ஆனாலும் 1861 ல் ஏற்பட்ட கோப்பிப் பயிர்ச்செய்கையின் வீழ்ச்சிக்குப்பின்னர் தேயிலைப் பயிர்செய்கைக்கு அழைத்துவரப்பட்ட (1870-1940) தொழிலாளர்கள் நிரந்தரமாக இலங்கையிலேயே தங்கவைக்கப்பட்டனர்.

**மலையகத்தில் கலாசார அடிப்படையில் இன்றும் சாதியம் நிலவுவதை மறுக்க முடியாது. ஆனால் சாதிய வன்மம், இறுக்கம் இல்லாமல் அந்த சாதியம் பேணப்படுவதாக உறுதிபடச் சொல்லலாம்.**

1871ல் சுகாதார சீர்கேடுகள் காரணமாக தொழிலாளர்கள் மத்தியில் தொற்றுநோய்கள் பரவியதுடன் பாரிய உயிரழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் பிரித்தானிய அரசு சுகாதாரத்தைப் பேணுவதற்கு சுகாதாரத் தேவைச் சட்டம் (Medical Wants Ordinance) எனும் சட்டத்தைக் கொண்டுவந்துள்ளனர். இந்தச்சட்டத்தினை கொண்டுவருவதற்காக தகவல் திரட்டல் ஒன்றைச் செய்துள்ளனர். இந்த அறிக்கையை சம்ர்ப்பித்த வில்லியம் கிளார்க் என்பவர் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் சாதிய விகிதாசாரப்பட்டியல் ஒன்றை சமர்ப்பித்துள்ளார். இவ்வறிக்கையின்படி முறையே பறையர் (தா) – 30%, பள்ளர் (தா) – 26%, சக்கிலியர் -(தா) 16%, அகம்படியர் (பி) 5%, கள்ளர் (பி) 5%, மொட்டை வேளாளர் (உ) 3 %, ரெட்டியார் 3%, இடையர் (பி) 2%, மறவர் (பி) 2%, புளுக்கர்(ம) 1.5%, ஆசாரி (ம)1 %, பித்தளை(ம), கம்மாளர்(ம) சிற்பி(ம), சாணர்(பி) ஆகிய ஒவ்வொரு பிரிவும் 1 %, வெள்ளாளர்(உ), செட்டி (உ) குரும்பர்(உ), வண்ணார்(ம) அம்பட்டையர் (ம), தாட்டியர் (ம) ஆகிய ஒவ்வொரு பிரிவும் 1/2 %, ஈழுவர் (ம), நாயக்கர் (உ) குரவர் (தா) பறவர் (ம) 1/4 % ஆகவும் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. (தா-தாழ்த்தப்பட்டோர், பி- பிற்படுத்தப்பட்டோர், ம- மத்திமம், உ-உயர்). தோட்டத்துறையுடன் உருவாகிய தொழிற்றுறைகள் மற்றும் நகர உருவாக்கத்திலும் தாழ்த்தப்பட்டோர் எனப்படும் பிரிவினரே வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனனர். (எழுதப்படாத வரலாறு – பெ.முத்துலிங்கம் பக் 8 – 1996).

வாசிப்புக்கு எட்டிய வரையில் மேற்குறித்த சாதியம் பற்றிய கணக்கெடுப்பே இலங்கை, மலையகத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலும் இறுதியுமான சாதிய கணக்கெடுப்பாகக் கொள்ளமுடியும். ஏனெனில் இந்தியாவில் போன்ற அதற்கான தேவை இலங்கையில் எழவில்லைஇந்தியாவில் பிறப்புச் சான்றிதழில் ‘சாதி’ (Caste) என மொழி பெயர்க்கப்பட்டிருப்பதும் இலங்கையில் அதே சாதி எனும் சொல் (Race) ‘இனம்’ என மொழி பெயர்க்கப்பட்டிருப்பதும் சுவாரஷ்யமானது.

இந்தியாவில் சாதி (Caste) எனும் பதிவு இடம்பெறும்போது மக்களுக்கு பின்வரும் தெரிவுகள் உண்டு. பழங்குடியினர் (ST-Schedule Tribes) பட்டியல்படுத்தப்பட்ட சாதியினர் (SC-Schedule Caste), அதி பிற்படுத்தப்பட்டோர் (MBC- Most Backward Caste) பிற்படுத்தப்பட்ட சாதியினர் (BC- Backward Caste), திறந்த நிலை அல்லது பிறசாதியினர் (Other Caste - OC) எனும் ஒன்றைத் தெரிவு செய்துகொள்ளமுடியும். பிற சாதியினர் என குறித்தாலே அவர் இந்துவாயின் உயர்சாதியினராகவும் இந்து இல்லாதவிடத்து வேறு மதம் சார்ந்தவராகவும் கொள்ளப்படுகிறது. மேலே மலையக சாதிய கணிப்பீட்டில் குறிப்பிட்ட தா- எனப்படும் தாழ்த்தப்பட்ட பிரிவினர் SC-ஆகவும் பி- எனப்படும் பிற்படுத்தப்படடோர் MBC ஆகவும் ம - எனப்படும் மத்திம பிரிவினர் BC ஆகவும் ஏனையோர் OC என்றும் பொதுவாகக் கொள்ளலாம். அதே நேரம் மலைச்சாதி மக்கள் - பழங்குடியினர் மிகவும் தாழ்த்தப்பட்டோராக (ST-Schedule Tribunes) பதிவு செய்யப்படுகின்றனர். தமிழகத்தில் இலங்கைத் தமிழர் பற்றிய தகவல் வியாபகம் குறித்து பலரும் அறிந்த விடயம் அங்குள்ள அரசியலில் அது அதிக செல்வாக்கைக் கொண்டுள்ளது என்பதாகும். அவர்களில் பலர் இலங்கையில் வாழும் மலையக மக்களை ‘மலைவாழ்/மலைசாதி மக்களாக (ST) புரிந்துகொண்டுள்ளனர்.வணிக நோக்கிலான தமிழ் இதழ்கள் கூட இந்த மக்களை ‘இலங்கையில் வாழும் மலைசாதி மக்களும் தமிழையே பேசுகிறார்கள்’ என எழுதியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்தியாவில் பழங்குடியினர் மற்றும் பட்டியல்படுத்தப்பட்ட சாதியினருக்கு இட ஒதுக்கீட்டு முறையில் அதிக வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பது அரசியலமைப்பு ஏற்பாடு. அம்பேத்கர் அவர்களின் திட்டம் அது. இப்போது அங்கு இடம்பெறும் சுவாரஷ்யம்

என்னவெனில் மத்திம மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சாதியர்களும் தங்களை SC யாக அதாவது பட்டியல்படுத்தப்பட்டோராக தாழ்த்தப்பட்டோராக பதிவு செய்துகொள்வதுதான். வெளியே தம்மை (MBC) மத்திம சாதியாக காட்டிக்கொள்ளும் பலர் அரசாங்க சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களை குறைந்த சாதியினராக (SC) லஞ்சம் கொடுத்து பதிவு செய்து கொள்ளுகின்றனர் எனும் குற்றச்சாட்டை SC பிரிவினர் முன்வைக்கின்றனர். பட்டியல்படுத்தப்பட்ட மக்களை சுரண்டும் படுமோசமான கைங்கரியம் இது. உதாரணமாக 'யாதவர்' எனும் சாதியினர் தற்போது BC எனப்படும் பிற்படுத்தப்பட்டோராகவே வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களை MBC தரத்திற்கு அதாவது இருப்பதை விட குறைந்த சாதியினராக வகையறாவில் சேர்க்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர். அரசாங்கத்தினால் பழங்குடியினர் மற்றும் பட்டியல்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் சலுகைகளை தங்களை நோக்கித் திருப்பிக்கொள்வதே இதன் நோக்கமாகவுள்ளது.

இலங்கையில் அரச பதிவுகளில் சாதி (Race) எனும் இடத்தை நிரப்பிக்கொள்ள மக்களுக்கு பின்வரும் தெரிவுகள் உள்ளன. சிங்களவர் (1), இலங்கைத்தமிழர் (2), இலங்கைச் சோனகர் (முஸ்லீம்) (3), இந்தியத் தமிழர் (4) ஏனையோர் (5). உதாரணத்திற்கு இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர் (மலையகத் தமிழன்) அவன் உயர் சாதி என சொல்லப்படும் மொட்டை வெள்ளாள சாதியாக இருந்தாலென்ன அல்லது தாழ்த்தப்பட்ட சாதியாக சொல்லப்படும் சக்கிலிய சாதியாக இருந்தாலென்ன பிறப்புச்சான்றிதழில் இலக்கம் 4 - இந்தியத் தமிழர் என்பதையே தெரிவு செய்வர்.

**இலங்கையில் இனப்பிரச்சினையும், இந்தியாவில் சாதிப் பிரச்சினையும் உச்சத்தில் எழுந்து நின்று ஆடுவதற்கான காரணமே இந்த அரசியலமைப்பு ஏற்பாடுகள்தான். இந்த இரண்டு ஏற்பாடுகளும் இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி 'அரசியலமைப்பில்' உள்வாங்கப்பட்டுள்ளமை என்பது அவதானிக்கத்தக்கது.**

மலையக மக்களின் வாழ்வியல், பொருளாதாரம், அவர்களுக்கு எதிரான ஒடுக்குமுறை என்பன காரணமாக அவர்களிடையே சாதிய வன்மம் தமிழ்நாட்டுடன் அல்லது யாழ்ப்பாண சமூகத்துடன் ஒப்பிடும்போது மிக குறைந்த அளவிலேயே உள்ளதை அவதானிக்கலாம். மலையகத்தில் வர்க்கப் போராட்டம், வேலைநிறுத்தப் போராட்டம் அரசியல், தொழிற்சங்கப் போராட்டங்கள் நடந்த அளவுக்கு எங்கும் சாதிய எதிர்ப்பு போராட்டங்களோ அல்லது சாதிய கலவரங்களோ பதிவு செய்யப்படவில்லை. வடக்கில் (யாழ்ப்பாணத்தில்) தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் - சாதி எதிர்ப்பு போராட்டம் போன்ற விடயங்கள் இன்றும் பெரும் புரட்சி செயற்பாடுகளாகப் பார்க்கப்படுவதானது அந்தளவுக்கு சாதிய வன்மம் நிறைந்திருப்பதையே காட்டுகின்றது.

*[அண்மையில் (2013 ஜூலை) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 41வது இலக்கிய சந்திப்பில் ஒரு அமர்வு சாதியம் பற்றியது. சட்டத்தரணி ரெங்கன் தேவராஜன் ஒருங்கிணைக்க எழுத்தாளர் தெணியான், சீனியர் குணசிங்கம், கல்வியதிகாரி எ.ஸி.ஜோர்ஜ், அகல்யா, தேவதாசன், முதலானோர் பங்கேற்றனர். தெணியான் அவர்களின் உரையில் குறிப்பிடத்தக்க அம்சமாகவிருந்த விடயம் யாழ்ப்பாண உயர் சாதியினர் எனச் சொல்வோர் தாழ்ந்த சாதியினர் என கருதுவோரை விளிப்பதற்கு (அழைப்பதற்கு) 'நீர்' என்ற சொல்லை பாவிக்கின்றர் என்பதாகும். பெரும்பாலும் மலையகத்தவர் ஒருவருடன் உரையாடும் யாழ்பாணத்தவர் மலையகத்தவரை சுட்டிப் பேசுவதற்கு 'நீர்' என்ற சொல்லாடலை பயன்படுத்துவதை அவதானிக்கலாம். 'நீர் எவ்விடம்?' எனக் கேட்பது (நீ எந்த இடத்தைச் சேர்ந்தவன் ? என்பதாகும். மலையகத்தவரை நோக்கி 'நீங்கள்' எனும் மரியாதைக்குரிய சொல்லை பயன்படுத்த இவர்கள் தயக்கம் காட்டும் நிலைமை இன்றும் யாழ்ப்பாணத்தவரிடையே நிலவுகிறது. இதில் யாழ்ப்பாண சூழலில் தாழ்த்தப்பட்டோர் என கருதும் சிலர் கூட மலையகத்தவரைப் பார்த்து இவ்வாறு 'நீர்' என அழைப்பது கவனிக்கத்தக்கது. இதனை அகல்யா தனதுரையிலே எடுத்துக்கூறினார். தான் ஒடுக்கப்பட்ட சாதியினராயினும் 'மலையகத்தைச் சார்ந்தவர்கள்' குறைந்த சாதியினராகவே (தம்மைவிட) தனக்கு அறியக்கிடைத்ததாக கூறினார்.*

*பிரான்ஸிலிருந்து வருகை தந்திருந்த 'வடு' ஆசிரிய குழாமைச் சேர்ந்த தேவதாசனின் உரை புலம்பெயர்ந்த நாடுகளில் எவ்வாறு சாதியம் பேணப்படுகிறது என்பதை சுவாரஷ்யமாக எடுத்துக்காட்டியது. புலத்தில்*

*'தம்பி உம்மட ஊர் எது' எனக் கேட்டாலே தன்னை எந்த சாதி என்பதை அறியவே அவ்வாறு கேட்கிறார் எனும் புரிதலைத் தருவதாக கூறினார். இதனை சீனியர் குணசிங்கம் தனதுரையில் ஊர்களின் பெயர்களை உதாரணம் காட்டி சாதியடிப்படையில் விளக்கியிருந்தார். ஆனால் மலையகத் தோட்டம் ஒன்றின் பெயரைத் தெரிந்து கொள்வதன் மூலம் ஒருவரது சாதியை அடையாளம் காணுவது எளிதல்ல.*

*கல்வியதிகாரி ஏ.ஸி.ஜோர்ஜ் அவர்களின் உரை யாழ்ப்பாண பாடசாலை சூழலில் (பாடசாலை-பாடசாலை அபிவிருத்தி சங்கம்- பழைய மாணவர சங்கம்- பாடசாலை அனுமதி –ஆசிரியர் நியமனம்- பதவியுயர்வுகள் முதலான விடயங்களில் ) எவ்வாறு சாதியம் நுணுக்கமாக பார்க்கப்படுகின்றது என்பதனை தெளிவாக விளக்கினார். இவரது உரையின் சாராம்சம் பெரும் ஆச்சரியத்தையும் கேள்வியையும் ஏற்படுத்தியமை கண்கூடு. இத்தனை அழிவுகளுக்குப்பின்னும் யாழ்ப்பாணம் சாதிய விடயத்தில் இந்தளவுக்கு ஈடுபாடு காட்டுகின்றதா அதுவும் கல்விச் சமூகத்தில்? எனும் கேள்வியை எல்லோர் மனதிலும் ஏற்படுத்திச் சென்றது.*

*மலையகத்தில் குறிப்பாக மத்திய மாகாணத்தில் மலையகத் தமிழருக்கு வழங்கப்பட்டுவந்த மாகாண (தமிழ்) கல்வியமைச்சு 2009-2013 காலப்பகுதியில் சாதிய விடயங்களில் அக்கறை காட்டத் தொடங்கியதாக சிவில் சமூக மட்டத்தில் ஒரு குற்றச்சாட்டு எழுந்தது. குறிப்பாக பாடசாலை அதிபர் நியமனம், ஆசிரிய ஆலோசகர் நியமனங்களில் இந்த பாகுபாடு காட்டப்பட்டதாகவும் குறித்த காலப்பகுதியில் பொறுப்பாகவிருந்த அமைச்சர் தானாகவோ அல்லது உந்துதலினாலோ மத்திம பிரிவு சாதியினருக்கு (தான் சார்ந்த) சார்பாக செயற்பட்டார் எனும் குற்றச்சாட்டு எழுந்தது. இதன் எதிரொலியாகவோ அல்லது பிற அரசியல் காரணங்களினாலோ இன்றைய (2013 ம் ஆண்டு இந்தப்பதவி தமிழருக்கு வழங்கப்படவில்லை) நிலையில் 'மலையகத்தமிழர்' ஒருவருக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பதவி 'வேண்டுதலின் பேரில்' இல்லாதாக்கப்பட்டுள்ளது.*

மலையகத்தில் கலாசார அடிப்படையில் இன்றும் சாதியம் நிலவுவதை மறுக்க முடியாது. ஆனால் சாதிய வன்மம், இறுக்கம் இல்லாமல் அந்த சாதியம் பேணப்படுவதாக உறுதிபடச் சொல்லலாம். இந்தியாவில் இருந்து குழுக்களாக அழைத்துவரப்பட்ட மக்கள் பெரும்பாலும் ஒரே சாதியினராக இருந்தனர். அவர்களின் 'பெரட்டு' (Parade) கங்காணியும் கூட அதே சாதியினராக இருந்தமையால் ஒரு தோட்டத்திற்குள் (பிரிவு) ஒரு சாதியினர் பெரும்பாலும் வாழ்வதை அவதானிக்கலாம். அதேநேரம் திட்டமிட்ட அடிப்படையில் இரண்டு சாதியக் குழுக்கள் ஒரே தோட்டத்திற்குள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதும் கண்கூடு.

பொதுப் புத்தியில் இன்றைய மலையகத் தோட்டங்களில் பெரும்பாலும் ஒரு தோட்டப்பிரிவில் பெரும்பான்மையானோர் பறையர் சாதியாகவோ அல்லது பள்ளர் சாதியாகவோ இருப்பார்கள். இவர்களை அடுத்த நிலையிலேயே அவர்களது வழக்கில் 'குடியானவர்' என பொதுவாகச் சொல்லப்படும் மத்திம பிரிவினர்களான கள்ளர், மறவர், அகம்படியர், உடையார், ஆசாரி, சோழியர், வெள்ளாளர் என வாழ்வர். ஒரு தோட்டத்தில் குறைந்தபட்சம் ஒன்று அல்லது இரண்டு வண்ணான் குடும்பமும், அம்பட்டையர் குடும்பமும் சக்கிலியர் குடும்பமும் வாழும். இது தொழில் கட்டமைப்பின்படி உருவாக்கப்பட்ட அமைப்பு.

மிக அண்மைக்காலம் வரை அதாவது தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்ட 1990 கள் வரை தொழிலாளர்களின் சம்பளத்தில் ஒரு சிறுதொகையை கழித்து வண்ணான் ஒருவருக்கு வழங்குவதன் மூலம் தொழிலாளர்கள் அவர்களது ஆடைகளை அவரிடம் சலவை செய்து கொள்ளும் மரபு இருந்தது. அதே நேரம் கோவில் திருவிழாக்களின்போது எரிபந்தங்கள் ஊடாக வெளிச்சம் வழங்கும் பொறுப்பு இவர்களுடையதாகவிருந்து வந்துள்ளது. அதேபோல அம்பட்டையர் எனப்படும் சிகையலங்காரிக்கும் இதே மரபு பேணப்பட்டு வந்தது. இவரது வீட்டுக்கருகாமையில் உள்ள அல்லது பொது இடமொன்றில் உள்ள சலூன் கடையில் தொழிலாளர்கள் முடிவெட்டவோ சவரம் செய்யவோ முடியும். அவருக்கான கூலியை தோட்டநிர்வாகம் தொழிலாளியிடம் கழித்து அவருக்கு வழங்கிவிடும். சில நகர சலூன்காரர்கள் தோட்டங்களுக்காக குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலைமைகளும் உண்டு. அதேநேரம் தோட்டங்களில் நிலவும் மரணவீட்டு 'காரியங்களை'ச் செய்யும் பொறுப்பு இந்த வண்ணான் மற்றும் அம்பட்டையர் சாதியினரின்

பொறுப்பாகவிருந்தது. அவ்வாறே தோட்டத்தில் உள்ள லயங்களுக்கு அருகே பொது மலசல கூடமே பாவனையில் இருந்து வந்தது. அந்த பொது மலசல கூடங்களை சுத்தம் செய்யும் தொழிலுக்காக சக்கிலியர் எனப்படும் சாதிப்பிரிவினர் உட்படுத்தப்பட்டனர். இதுதவிர மரணச்சடங்கின்போது தோட்டங்களுக்கு மரணசேதி தூது செல்லுதல், மயானத்தில் குழி வெட்டுதல் போன்றனவும் இவர்களது பொறுப்பாகவிருந்தது.

தொழிலாளர்கள் தொழிலுக்குப் புறப்படும் நேர சமிக்ஞையை தப்பு ஒலி எழுப்புவதன் மூலம் வழங்கும் பொறுப்பு தோட்டத்தில் உள்ள பறையர் சாதியைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்கும். காலையில் 'பெரட்டுத்தப்பு' மூலம் மக்களை எழுப்பிவிடும் இவர்கள் மரண வீடு முதல் திருவிழா சடங்குவரை 'தப்பு' மூலம் இசை வழங்குவர். பள்ளர் சாதியினரிடையே குறித்த தொழில் என வரையறுத்துக் கூற முடியாத போதும் வேட்டையாடுதல் மற்றும் மலைத்தேன் எடுக்கும் விடயங்களில் இந்த பள்ளர் சாதியினர் கை மேலோங்கியிருக்கும். இந்த நடைமுறைகள் எல்லாமே கடந்த இரு தசாப்த காலத்தில் வெகுவாகக் குறைந்துவிட்டன அல்லது இல்லாமல் போய்விட்டன என சொல்லலாம்.

எது எவ்வாறெனினும் இந்த தொழில்களைக் காரணம் காட்டி அவர்களிடையே சாதிய வன்மம் நிலவியதாக பெரிதாகக் கூறுவதற்கில்லை. இதற்கு பிரதான காரணமாக அமைந்தது அந்த 'லயன்' (Line ) வாழ்க்கை முறை. பத்துக்கு இருபது அடிகள் (10x20) கொண்ட ஒரு அறை. அதற்கு முன் ஆறுக்கும் பத்துக்குமான (6x10) எனப்படும் சமையல் கட்டு அல்லது 'இஸ்தோப்பு' பகுதி. கையை மேலே உயர்த்தினால் விறகு சேகரித்துக்கொள்ளும் பரன் (அட்டல்) இதுதான் ஒரு லயன் அறை. இதுபோல பத்து அறைகளைக் கொண்டது ஒரு 'லயம்'. இது ஒருபக்க லயம். இரண்டு பக்க லயமானால் இதேமுறை பின்பக்கமாகவும் அமைந்துவிட, இரண்டு பக்கத்தாருக்கும் உள்ளே வெளிச்சம் இல்லாதுபோக இருபத்துமணிநேர இருட்டு மட்டுமே எஞ்சும். 'இஸ்தோப்பு' பக்கத்துக்கு மட்டுமே வெளிச்சம் வரும். ஒரு அறைக்கு ஒரு குடும்பம். பத்து அறைக்கும் பத்துக் குடும்பம். இரண்டுபக்க லயமானால் ஒரு லயத்தில் இருபது குடும்பங்கள். (ஒரு குடும்பம் என்பது சராரியாக 4 முதல் 6 வரையான உறுப்பினர்களைக்கொண்டது). இரண்டு பக்க லயம் ஒன்றை எடுத்துக்கொண்டால் இதில் 10 பறையர் குடும்பமும், ஏழு பள்ளர் சாதியினரும், இரண்டு குடியான சாதியினரும் ஒரு வண்ணான் சாதியோ அல்லது அம்பட்டையர் சாதியோ அல்லது சக்கிலியர் சாதியினரோ வாழும் சூழல் காணப்படும். இதுபோல 10 முதல் 12 லயங்களைக் கொண்டது ஒரு டிவிஷன். மூன்று முதல் ஐந்து டிவிசன்களைக் கொண்டது ஒரு தோட்டம்.

எல்லோருக்கும் ஒரே இருட்டு, லயத்திற்கு ஒரு பொது மலசலகூடம் அல்லது அதுவும் இல்லாமல் மலைப்பகுதியின் ஓடைப்பக்கம் போய்வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை. ஒரேவிதமான அடுப்பு. அதற்கு விறகு சேகரிக்க மலைக்கு ஏறி இறங்கவேண்டிய நிலை. இந்தப்பின்னணியில் எப்படி தோன்றும் சாதிய வன்மம்? டிவிஷனுக்கு ஒரு கோயில் தவிர தேயிலை மலைகள் எங்கும் மாடசாமி, சிண்டாகட்டி, முனி, ரோத முனி, மதுரைவீரன், கருப்பசாமி, மாரியம்மன் கோயில்கள் தாராளமாகக் காணப்படும். தோட்டத்து கோயிலில் ஒரு பண்டாரம். இவர் பெரும்பாலும் குடியான சாதியைச் சேர்ந்தவராக இருப்பார். (இப்போது சமஸ்கிருத்தை ஓரளவு பாடமாக்கிக்கொண்டு ஓதும் எந்த சாதியனுமே அங்கு 'ஐயர்' தான்) கோவில் கமிட்டி (நிர்வாக சபை) எல்லா சாதியினரும் இணைந்த குழு. இந்த குழு சாதி அடிப்படையில் அல்லாது தோட்ட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய ஆளுமை உள்ளவர்களைக் கொண்டதாகவே தெரிவு செய்யப்படும். ஏனெனில் கோயில் கட்டுவதானாலும் சரி திருவிழாவானாலும் சரி தோட்ட நிர்வாகமே தொழிலாளர் (தொழிற்சங்க சந்தா சேகரிப்பும் இவ்வாறுதான்) சம்பளத்தில் சந்தாவை வசூலித்துக் கொடுக்கும். ஆகவே அதற்கேற்றாற்போல் கோயில் கமிட்டி அமைக்கப்படும். தோட்டத் தொழிலாளி ஒருவன் தனது இருப்பிடத்தை கொஞ்சம் முன்னகர்த்துவதற்கே இடமளிக்காத தோட்டநிர்வாகம் கோயில் கட்டுவதற்கு இடம் ஒதுக்கி அதன் நிர்வாகத்துக்கும் இவ்வாறு ஒத்துழைப்பதற்கு காரணம் அதற்குள் புரளும் தொழிலாளர்களின் பணத்தை தனது 'ரொலிங்' களுக்கு வட்டியின்றி வைத்துக்கொள்ளும் கைங்கரியம். கோயில் கட்டும் பணிகளின்போது ஒரு தோட்டத்தில் இந்தத் தொகை 'கோடிகளை'யும் தொடுவதுண்டு.

**வடக்கில் (யாழ்ப்பாணத்தில்) தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் – சாதி எதிர்ப்பு போராட்டம் போன்ற விடயங்கள் இன்றும் பெரும் புரட்சி செயற்பாடுகளாகப் பார்க்கப்படுவதானது அந்தளவுக்கு சாதிய வன்மம் நிறைந்திருப்பதையே காட்டுகின்றது.**

இந்த சூழலில் வாழும் மலையக மக்களிடையே உள்ள சிறப்பான பண்புகளில் ஒன்று 'உறவுமுறை கொண்டு' அழைத்துக்கொள்வது. வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த இரண்டு குடுமபங்கள் 'மாமன்-மச்சான்' 'பெரியப்பா-சித்தப்பா' என உறவாடுவார்கள். எவ்வாறெனினும் திருமணத்தின்போது தங்களது சாதியினரிடையே தோட்டம்விட்டு தோட்டம் சென்று பெண்பார்த்து அல்லது மாப்பிள்ளைபார்த்து மணந்து கொள்ளும் சாதியக் கலாசாரம் இன்றும் மலையகத்தில் நிலவுகின்றது. அதே நேரம் கலப்பு திருமணங்கள் இவர்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. அந்த கலப்பு திருமண முறை என்பது சமூக செயற்பாட்டாளர் தோழர் ஏ.இளஞ்செழியன் அவர்கள் நடாத்திவைத்தது போல சாதி ஒழிப்புத்திருமணங்களாக - சுயமரியாதைத் திருமணங்களாக இப்போது இல்லாத போதும் ஒரே சூழலில் வாழ்வதனால் ஏற்படும் காதல் திருமணங்களாகவும் இளவயது திருமணங்களாகவுமே அமைந்துவிடுகின்றன.

**இந்த கலப்புத் திருமணங்கள் மலையக மக்களிடையே நிலவிவந்த சாதிய வேறுபாட்டுத் தன்மைகளைப் பெரும்பாலும் உடைத்துப்போட்டுள்ள அதேவேளை உலகமயமாதலும் அதனையொட்டிய தொழிநுட்ப வியாபகமும் மலையக மக்களிடையே சாதிய வன்மத்தைத் திணிக்கும் கருவிகளாக இன்று மாறிப்போயுள்ளமையை அவதானிக்கலாம்.**

லயத்துக்கூரைகளில் வட்டவட்டமாக வைக்கப்பட்டிருக்கும் கேபிள் டிவி எண்டனாக்களினூடாக தமிழகத்தின் 'சாதிச் சேனல்கள்' தங்களது கைவரிசையைக் காட்டி வருகின்றன. பறையர் - என்றால் விடுதலை சிறுத்தையும், பள்ளர் என்றால் புதிய தமிழகமும், வன்னியர் என்றால் பாட்டாளி மக்கள் கட்சியும், தேவர் என்றால் நாம் தமிழர் கட்சியும், நாடார் என்றால் சமத்துவ மக்கள் கட்சியும் நாயுடு என்றால் தேசிய முற்போக்கு திராவிடர் கழகமும் என்று சாதிரீதியாக கட்சி அமைக்க முடியுமானால் நாமும் ஏன் அவ்வாறு கட்சி தொடங்கக் கூடாது என சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். இந்த சூழல், இதுவரைக்காலமும் மலையகத்தில் நிலவிய சாதியம் சார்ந்த நிலைமைகளுக்கு பெரும் சவாலாகியுள்ளது.

இதற்காக மலையக அரசியலில் இதுவரைக்காலமும் சாதியம் பேணப்படவில்லை என்பது கருத்தல்ல. மலையகப் 'பாரதி'யாக பார்க்கப்படவேண்டிய நடேசய்யரே 'பார்ப்பனராக' ஓரம் கட்டப்பட்டுள்ளார். அதேபோல மலையகத் தொழிலாளர்களின் பிரதான அரசியல் இயக்கமாக வளர்ந்த இலங்கை - இந்திய காங்கிரஸில் இருந்து திறமைமிக்க வி.கே.வெள்ளையன் சாதிய காரணத்தினால் ஓரம் கட்டப்பட்டார். அதற்கு எதிராக எழுந்த அலையை சமாளிக்க ஜேசுதாசன் எனப்படும் சாதாரண தொழிலுறவு அதிகாரி 'செனட்டராக' தெரிவு செய்யப்பட்டார். சி.வி.வேலுப்பிள்ளை, கே.இராஜலிங்கம், சோமசுந்தரம் போன்ற ஆளுமைகள் சாதிய காரணத்தால் ஓரம் கட்டப்பட்டனர்.

ஆனால், இவை அரசியலுக்கான சாதிய பிரயோகமே தவிர சமூக மட்டத்தில் கலாசார ரீதியாக உழைப்பாளர் மக்களிடையே இந்த சாதிய வன்மம் வெளிப்படுவதேயில்லை.

ஆதிக்க சாதியினரின் தலைமையில் இயங்கும் கட்சிகள் தங்களது வாக்குகளை அதிகரித்துக்கொள்ள ஒடுக்கப்பட்ட சாதியப்பிரிவினர் ஒருவரை 'ஒரு' வேட்பாளராக சேர்த்துக்கொள்ளும் கைங்கரியம் பேணப்பட்டு வருகிறது. ஒவ்வொருமுறையும் பாராளுமன்றத் தேர்தலின்போது (உதாரணமாக-நுவரெலியா மாவட்டத்தில்) ஒரு கட்சியின் சார்பில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களில் இருவர் ஆதிக்க சாதியினராகவும் ஒருவர் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவராகவுமே அமைகின்றனர். மாகாண சபைத் தேர்தல்களில் ஆறு (06) வேட்பாளர்களை நிறுத்தும் போது தொகுதிவாரியாக மூன்று - மூன்று என (கட்சி மட்டத்தில்) பிரிக்கின்றனர். அதில் இருவர் ஆதிக்க சாதியினராகவும் ஒருவர் ஒடுக்கப்பட்ட

**'கள்ளத்தோணிகள்' என்பதனுடாக இவர்கள் தங்களது நாட்டுக்குள் கள்ளத்தனமாக படகினில் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பதை குறிப்பதற்கும் அதேபோல இந்தியா தமக்கு (யாழ்ப்பாணத்திற்கு) வடக்கே அமைந்தபடியால் அங்கிருந்து வந்தவர்களை இழிவாகச் சொல்வதற்கு 'வடக்கத்தியான்' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்கால மலையக சமூகத்தினர் தங்களுக்கு (மலையகத்துக்கு) வடக்கே உள்ள மாகாணமாக யாழ்ப்பாணம் அமைந்துள்ளதால் அங்குள்ளவர்களை 'வடக்கத்தையவர்கள்' என குறிப்பதும் வடக்கு – கிழக்கு மக்கள் இன்று 'கள்ளத்தோணிகளில்' சென்று தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம் பெற்றிருப்பதும் முன்னையதின் தலைகீழ் நிலைமையைக் காட்டி நிற்கின்றது.**

சாதியினராகவும் அமைகின்றனர். இந்த நிகழ்வுகளை தற்செயலாக நடப்பதாக கொள்ள முடியாது. திட்டமிட்ட அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குகளைக் கொள்ளயடிப்பதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டு ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவரை வேட்பாளராகச் சேர்த்துவிட்டு தோற்கடிக்கும் முயற்சி அல்லது வென்றுவிட்டால் அடுத்த முறை அவரை கட்சியில் இருந்து கழற்றிவிடும், ஓரம் கட்டும் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதனை அவதானிக்கலாம். ஆதிக்க சாதியினர் தமது பிரதிநிதித்துவத்தைக் தக்கவைத்துக்கொள்ளும் கைங்கரியமாக மலையக அரசியலில் சாதியம் பேணப்படுகிறது. இதனை 'மலையக அரசியலில் சாதியம்' எனும் தலைப்பில் தனியான பத்தியின் கீழ் கொண்டு வருவதே பொருந்தும். அவ்வாறே சாதிய சங்கங்கள் என்று பார்க்கின்றபோது 'ஆறுநாட்டு வேளாளர் சங்கம்' – 'இலங்கை நாடார் சங்கம்' ஆகிய இரண்டு சங்கங்கள் பதிவு செய்த சாதி சங்கங்களாக இயங்கிவருகின்றன. ஆனால் சமூக (Community Society) நிறுவனங்களாகவே பதிவைப்பெற்றுக்கொள்கின்றன. இந்த இரண்டு சாதியினரும் 'மலையகம்' என்ற சொல்லாடலில் தங்களை இணைத்துக்கொள்ளாது 'இந்தியத் தமிழர்' எனும் அடையாளத்துடன், இந்தியாவுடன் அதிகபட்ச உறவு கொண்டாடும் நிலைமையே உள்ளது. பெரும்பாலும் கொழும்பு நகரத்தை பிரதானமாகவும் கண்டி உள்ளிட்ட மலையக நகரங்களில் வியாபாரத்தில் ஈடுபடுவோரும் இதில் அங்கம் வகிக்கின்றனர். எனவே வியாபாரிகளான இந்த சாதிப்பிரிவினரின் ஒன்றிணைவு அவர்களது சாதிசார் நலன்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள்ளது.

அதேநேரம் ஒட்டுமொத்த இந்திய வம்சாவளி மக்களுக்காக இந்திய அரசினால் வழங்கப்படும் சலுகைகளை (மாணவர்களுக்கான உயர்கல்விப் புலமைப்பரிசில் போன்ற) நலன்களை தமதாக்கிக் கொள்ளும் கைங்கரியம் இந்த சாதிய சங்கங்கள் மூலம் இடம்பெறுகிறது. கடல்கடந்து வாழும் இந்தியர்களின் ஒன்றிணைவு அமைப்பான 'கோப்பியோ' (GOPIO – Global Organization of People of India Origin ) போன்ற அமைப்புகளில் இந்த சாதிய குழுமங்கள் செல்வாக்கு செலுத்துவதுடன் அத்தகைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதிலும் முனைப்பு காட்டுகின்றன.

சர்வதேச ரீதியாக வாழும் இந்தியர்கள் - Non Resident Indian (NRI), இந்திய வம்சாவளி மக்கள் – People of Indian Origin -PIO, கடல் கடந்து வாழும் இந்தியர்கள்– Over Seas Citizen of India OCI போன்ற வகையறாக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். NRI –OCI போன்றன நேரடி இந்தியர்களை குறித்து நிற்கின்றது. ஆனால் PIO என்பது இந்திய வம்சாவளியினரைக் குறித்து நிறகின்றது. எனவே இலங்கையில் வாழும் மலையக மக்கள் இந்த PIO தகுதியிலேயே அடங்குதல் வேண்டும். உலகம் முழுவதிலும் வாழும் செல்வாக்குள்ள இந்திய வம்சாவளியினர் இந்த PIO தகுதியைப் பெறுவதுடன் அதற்காக அவர்களுக்கு PIO CARD எனும் ஒரு அடையாள அட்டையும் வழங்கப்படுகிறது. இந்திய அரசாங்கம் வழங்கும் புலமைப்பரிசில்கைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் போது இந்திய வம்சாவளி என்பதை நிரூபிக்க PIO Card அல்லது OCI card அல்லது NRI card கேட்கப்படும். மலையக மக்களால் இந்த அட்டைகளை எதனையும் ஆதாரமாகக் காட்ட முடியாது. ஏனெனில் அதுவொன்றும் அவர்களுக்கு இல்லை. ஆனால் மேற்சொன்ன சாதி சங்கத்தார் தங்களுக்கு உள்ள 'இந்திய' தொடர்பை வைத்து பெரும்பாலும் OCI உரித்துடையவர்களாக உள்ளமையால் புலமைப்பரிசில்களை இலகுவாகப் பெற்றுவிடுகின்றனர். எனவே எண்ணிக்கையில் குறைவான இந்த சாதிய சங்கத்தார் தங்களை இந்தியர்களாகக் காட்டிக்கொள்ளவும் அதன் மூலம் இந்திய வம்சாவளி மக்களுக்கான நலன்களைப் பெற்றுக்கொள்ளவும் சாதியம் துணை நிற்கின்றது. இந்த நடைமுறைகள் பற்றிய தனியான பதிவுகளைக் கொண்டுவரும் பத்திகள் மூலம் இவற்றை விரிவாக நோக்கலாம்.

எது எவ்வாறாயினும் தமிழர்கள் என்ற அடிப்படையில் தென்னிந்திய, யாழ்ப்பாண சமூகத்தவர்களுடன் ஒப்பிடும்போது பண்பாட்டு அடிப்படையில் சாதிய வன்மம் குறைந்த சமூகமாக 'இலங்கை மலையகத் தமிழர்' சமூகத்தைக் கொள்ள முடியும். அவர்களை சாதிய ரீதியாக அணி திரட்டுவதை விட உழைப்பாளர்களாக வர்க்க ரீதியாக ஒன்று திரட்டுவது இலகுவானதும் அவசியமானதுமான வழிமுறையாகும். அவர்களை 'உழைக்கும் வர்க்கமாக' அணிதிரட்டுவதால் உருவாக்கப்படும் அரசியல் அமைப்பின் ஊடாகவே அந்த மக்களின் அவல வாழ்விற்கு விடுதலை தேடமுடியும். 'மலையக மக்கள்' சார்ந்து இன்று கட்டியெழுப்பப்பட்டுவரும் 'மலையக தேசியம்' எனும் கருத்துருவாக்கமும் கூட இந்தப் பின்னணியில் நின்று எழுகின்ற ஒன்றாகும்.

**சாதிய அடிப்படையைக் கொண்ட 'தமிழ்த் தேசிய'த்தில் இருந்து கவனமான புரிதலுடன் வேறுபடுத்தி அறிந்து கொள்ளவேண்டியதும் முன்னெடுக்கப்பட வேண்டியதுமான விடயமாக 'மலையகத் தேசிய' கருத்தியலைக் கொள்ள வேண்டியுள்ளது.**

**யுத்த நிர்வாகிகள்...** *2ம் பக்கத் தொடர்ச்சி...*

சுருளும் என்பதையும் நாம் கண்டு வருகின்றோம்.

எனவே யுத்தக்குற்றம் தீர்பாயம் என்பதோ, மனித உரிமைகள் மீதான கருசனை கொண்ட பொறிமுறைகள் என்பதோ எமது நாட்டு மக்களால் எமது நாட்டுக்குள்ளேயே எமது பண்பாட்டு கலாசார விழுமியங்களின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட வேண்டும். அதுவே எதேச்ச அதிகார சக்திகளை ஓரம்கட்டும். தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து சிறுபான்மை மக்களுக்கும், ஒடுக்கப்படும் சிங்கள மக்களுக்கும் மறுவாழ்வினை தேடித்தரும் என நாம் நம்பலாம். ஆனால் அத்தகைய மாற்றம் ஒன்று நிகழ்ந்துவிடாமல் தெற்கில் உள்ள பேரினவாத சக்திகளே மீண்டும் மீண்டும் பலம் பெறுவதற்கான சூழ்நிலைகளை தக்கவைக்கும் முயற்சிகளே தமிழ் தரப்பில் இருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது துரதிஷ்டவசமானதாகும். சிங்கள மேலாதிக்கக் குரல்களுக்கு எதிராக வடக்கில் இருந்து எழுப்பப்படும் “தமிழ் ஹெல உருமய” குரல்கள் நாட்டில் இனவாத கும்பல்களை கொதிநிலையில் வைத்திருக்கவே வழிவகுக்கின்றன என்பதை எமது மக்கள் புரிந்துகொள்வது காலத்தின் கட்டாயமாகும். எப்படியிருந்த போதிலும் மிகவிரைவில் மக்களின் ஆதரவுடனான ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்படவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

# சிந்தனை

நவீனத்துவம் எல்லாவற்றையுமே ஒரு சட்டகத்துக்குள்
கொண்டு வந்து, சிந்திக்க வேண்டும் என்று
நமக்குக் கற்றுத் தந்துள்ளது.

வெள்ளையர்கள் போட்ட பாடத்திட்டம் கூட
அப்படிப்பட்டது தான். அதற்கு வெளியே சிந்திக்க
வைத்தால் அவர்களின் காலனித்துவ கதிரைகள்
ஆட்டம் கண்டுவிடும் என்ற அச்சம்!

ஆனால் சட்டகத்துக்கு வெளியேயும் உண்மைகள்
சிந்திப்பதற்கான சாத்தியங்கள் விரிந்து கிடக்கின்றன.
மத்திய கிழக்கு இஸ்லாமிய புத்துயிர்ப்புவாத
சிந்தனைகள் நூறு வீதம் தென்னாசியச் சூழலுக்கு
பொருந்தி வரும் எனக் கருத முடியாது.
இங்குள்ள மொழி, பண்பாடுகள், வாழ்வியல்
அம்சங்கள், அதிகாரப் படி நிலைகள் போன்ற
பல சமூக உள்ளடுக்குகளை கருத்திற் கொண்டு தான்
வெளியில் இருந்து வரும் சிந்தனைகளையும் நிகழ்ச்சி
நிரல்களையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

தடாலடியாக முற்றிலும் வேறுபட்ட புவியியல்
சூழலில் தோன்றிய ஒன்றை
இங்கே நிலை நிறுத்திவிட முடியாது.
அதை நாம் தான் விவாதிக்க வேண்டும்..!

ஏ.பி.எம். இத்ரீஸ்

## வாசகர்களுக்கு...

**வடு** பத்திரிகைக்கான
கதை, கவிதை, கட்டுரை
மற்றும் தகவல்கள்
போன்ற
ஆக்கங்களையும்
விமர்சனங்களையும்
உங்களிடம் இருந்து
எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகட்கு:

இலங்கைக்கு
akalsinthu@gmail.com

புலம்பெயர் நாடுகளுககு:
‘VADU’
F.D.S.D.S
70, SQUARE DES SAUVES
95140 GARGES LES GONESSE
FRANCE
VADU.WORLD@hotmail.fr

தலித் சமூக மேம்பாட்டு
முன்னணியின் இணையத்தள
முகவரி...

www.Thuuu.net

சாதிய ‘வடு’
அகற்றிடத் துணிந்த
நெடும் பயணம்
இது..!